மம். மாஹாத்ம்யத்தில் இதுக்கு ஸமாநமாவது இதை யதிகரித்ததா வதுவேறொரு மந்த்ரம் கிடையாது. இதை யொருகாலுச்சரித்தால் உடனே ஸம்ஸாரத்தை யறுத்துவிடும். இதரமான எல்லா மந்த்ரங்க ளினாலும் போக்கத்தக்கதாயும் போக்கத்தகாததாயுமுள்ள ஸகல பா பங்களையும்போக்கி அவைகளால் ஸாத்யமாயும் அஸாத்யமாயுமுள்ள ஸகல பலங்களையும் தானொன்றே கொடுக்கும். இது ஸர்வேஶ்வர னுக்கு மிகவும் ப்ரியமானது. இதை ருஷி, சந்தஸ்ஸு, தேவதை, அங்கந்யாஸ கரந்யாஸங்கள், முத்ரை, இவைகளுடன் உபதேசித்து அர்த்தத்தையும் தானே உபதேசிக்கவேண்டியது. அங்கந்யாஸ கர ந்யாஸங்கள், முத்ரை, சந்தஸ்ஸு, தேவதை, இவைகளில்லாமல் வெறும் மந்த்ரத்தை யுச்சரித்தாலும் இதர மந்த்ரங்களின் ஸித்தியினு லுண்டாகும் பலத்தை யடைவன். கரு.

అనధీత్య ద్వయంమన్త్రం నవిప్రో వైదికోభవేత్।
మన్త్రరత్నేనరహితం బ్రాహ్మణం దూరతస్త్యజేత్॥ ౧౬.

அநதீத்யத்வயம்மந்த்ரம் நவிப்ரோவைதிகோபவேத்|
மந்த்ரரத்நேநரஹிதம் ப்ராஹ்மணம்தூரதஸ்த்யஜேத்|| கசு.

தா-ம். த்வயமந்த்ரத்தை நியமத்துடன் ஆசார்யனிடத்தி லிரு ந்து எவன் க்ரஹிக்கவில்லையோ? அவன் ப்ராஹ்மணகுலத்திற் பிற ந்த போதிலும் வேதோக்தமான ஒரு கர்மங்களுக்கு முபயோகியாக மாட்டான். ஆகையால் அவனை தூரத்திலே விட்டுவிடவேண்டியது.

అధ్యాపయేద్ద్వయంమన్త్ర మాచార్య శ్శిష్యవత్సలః।
అధ్యాపయేత్తతఃపశ్చాన్మన్త్రమష్టాక్షరంతథా॥ ౧౭.

அத்யாபயேத்த்வயம் மந்த்ர மாசார்யச்சிஷ்யவத்ஸலஃ|
அத்யாபயேத்ததஃ பச்சாந மந்த்ரமஷ்டாக்ஷரம்ததா|| கஎ.

தா-ம். ஆசார்யன் சிஷ்யனிடத்தில் ப்ரீதியுடையனாய் த்வயமந் த்ரத்தை முன்னே உபதேசித்து அதுக்கநந்தரத்தில் அஷ்டாக்ஷர த்தையும் ந்யாஸம் முத்ரை ருஷி தேவதைகளோடு உபதேசிக்க வேண்டும். கஎ.

అచక్రధారిణం విప్రం యోఽధ్యాపయతి దేశికః।
సగురు ర్నరకంయాతి కల్పకోటిశతంద్విజాః॥ ౧౮.

அசக்ரதாரிணம்விப்ரம் யோத்யாபயதிதேசிகஃ
ஸகுருர்நரகம்யாதி கல்பகோடிசதம்த்விஜாஃ கஅ.

தா-ம். எந்த ஆசார்யன், ஸமாஶ்ரயணமில்லாத ப்ராஹ்மணனுக்கு மந்த்ரத்தை யுபதேசிக்கிறானோ? ருஷிகளே! அவன் நரகத்தை யடைந்து அநேக கல்பங்கள் அங்கேயே வஸிப்பன். கஅ.

తస్మాత్తాపాదిసంస్కారా స్సర్వమన్త్రేషుసత్తమాః ।
అధ్యాపయేత్తతః పశ్చాదన్యథా నరకం వ్రజేత్ ॥ ౧౯.

தஸ்மாத்தாபாதிஸம்ஸ்காராஸ் ஸர்வமந்த்ரேஷுஸத்தமாஃ|
அத்யாபயேத்ததஃ பஶ்சாதந்யதாநரகம்வ்ரஜேத்|| ககூ.

தா-ம். ஆகையால் ஸமாஶ்ரயணம் முதலான கீழ்ச்சொன்ன ஸம்ஸ்காரங்கள் எந்தமந்த்ரத்தை யுபதேசித்துக் கொண்டபோதிலும் அவஶ்யம் செய்துகொள்ளத் தக்கதுகள். அவைகளைச் செய்தே மந்த்ரத்தை யுபதேசிக்கவேண்டும். இல்லாவிடில் நரகத்தை யடைவன்.

ఏకస్మిన్నివసే వాపి కృత్వా తాపాదిసంస్క్రియాః ॥
పృథక్పృథక్చానుపూర్వ్యా సర్వం కుర్యాదతన్ద్రితః ॥ ౨౦.

ஏகஸ்மிந்திவஸே வாபி க்ருத்வா தாபாதிஸம்ஸ்க்ரியாஃ|
ப்ருதக்ப்ருதக்சாநுபூர்வ்யா ஸர்வங்குர்யாததந்த்ரிதஃ|| உ0.

தா-ம். ஸமாஶ்ரயணம் முதலாகச் சொல்லப்பட்ட ஸம்ஸ்காரங்களை யெல்லாம் ஒருதிநத்திலாவாது, வெவ்வேறு திநங்களிலாவது, சொன்ன க்ரமப்படி ஒன்றும் விடாமல் செய்யவேண்டும். உ0.

అధీత్య మన్త్ర మాచార్యం పూజయే ద్భక్తితో ద్విజః ।
ఆచార్యాధీనవృత్తిస్తు యావజ్జీవం భవేత్సదా ॥ ౨౧.

அதீத்யமந்த்ரமாசார்யம் பூஜயேத்பக்திதோத்விஜஃ|
ஆசார்யாதீநவ்ருத்திஸ்து யாவஜ்ஜீவம்பவேத்ஸதா|| உக.

தா-ம். சிஷ்யன் மந்த்ரத்தை நியமத்துடன் கற்றபின்பு ஆசார்யனை பக்தியுக்தனாய்ப் பூஜிக்கக்கடவன். அநந்தரம் ப்ராணனுள்ள வளவும் எப்போதும் ஆசார்யனுக்குப் பாதந்த்ரமான வ்ருத்தியையுடையனா யிருக்கக்கடவன். அதாவது - ஆசார்யன் அமுதுசெய்த பின்பு அந்த சேஷத்தைத் தான் புஜித்தல், அவனைக் காட்டிலும் தாழ்ந்த இடத்தில் உட்கார்தல், படுத்தல், பின்செல்லல், ஸமித்து குசம் திருத்துழாய் இவைகளைக்கொண்டு தருதல், இவை முதலானவைகள்.

హోమశేషంసమాప్యాథ బ్రాహ్మణాన్భోజయేచ్ఛుభాన్।
యావచ్ఛరీరపాతన్తు ద్వయమావర్తయేన్మనుమ్॥ ౨౨.

ஹோமசேஷம்ஸமாப்யாத ப்ராஹ்மணாந்போஜயேச்சுபாந்|
யாவச்சரீரபாதந்துத்வய மாவர்தயேந்மநும்|| ௨௨.

தா-ம். சிஷ்யனுக்கு ஆசார்யன் பக்கல் செய்யவேண்டும் முறையைச் சொல்லி ஸம்ஸ்காராந்தத்தில் ஆசார்யன்செய்யவேண்டும் க்ருத்யத்தைச்சொல்லுகிறார். மந்த்ரோபதேசாநந்தரத்தில் செய்யவேண்டும் ஹோமத்தைச் செய்து முடித்து நல்லொழுக்கமுடைய ப்ராஹ்மணோத்தமர்களை அமுது செய்விக்கவேண்டியது. பிற்பாடுசரீரமுள்ளளவிலும் மந்த்ரராஜனை த்வயத்தை அநுஸந்திக்கக் கடவன்.

ఇతి శ్రీపరాశరస్మృతావుత్తరఖణ్డేమన్త్రసంస్కార
వర్ణనన్నామతృతీయోఽధ్యాయః,

௩-வது அத்யாயம் முற்றிற்று.

---

௪ - வது அத்யாயம்.

யாகஸம்ஸ்காரத்தின் க்ரமம்.

శ్రీపరాశరఉవాచ.

శుభకాలే విధానేన ప్రణిపత్య తతో గురుమ్।
అస్యప్రసాదలబ్ధస్తు గృహీత్వావిగ్రహంహరేః॥ ౧.
శ్రీభూమినీళాసహితం సాయుధంసపరిచ్ఛదమ్।
అర్చయేద్విగ్రహన్నిత్యం యావత్కాలమతన్ద్రితః॥ ౨.

ஸ்ரீபராசரஉவாச

சுபகாலேவிதாநேந ப்ரணிபத்யததோகுரும்|
அஸ்யப்ரஸாதலப்தந்து க்ருஹீத்வாவிக்ரஹம்ஹரே:||
ஸ்ரீபூமிநீளாஸஹிதம்ஸாயுதம் ஸபரிச்சதம்|
அர்ச்சயேத்விக்ரஹந்நித்யம் யாவத்காலமதந்த்ரித:|| ௨.

தா-ம். பராசரர் சொல்லுகிறார்.—தாபம் முதல் மந்த்ரக்ரஹண பர்யந்தமான நாலு ஸம்ஸ்காரங்களுக்குப் பிற்பாடு, சுபமான திதி

வாரநக்ஷத்ரங்கள் கூடின திநத்தில் நித்யகர்மங்களை யநுஷ்டித்தவனாய் ஆசார்யன் ஸந்நிதியில் தெண்டன் ஸமர்ப்பித்து அவனநுக்ரஹித்துத்தந்த பகவானுடைய அர்ச்சாவிக்ரஹத்தை, ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவிகளென்ன, திருவாழி முதலான ஆயுதங்களென்ன, அநந்தன் முதலான பரிஜநங்களென்ன, இவைகளுடன் கூட எழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஆயுஸ்ஸுள்ள வரையிலும் சோம்பலைவிட்டுத் திருவாராதநம் செய்யக்கடவன்.

శ్రౌతస్మార్తాగమోక్తానాం గృహీత్వా సమ్మతం గురోః।
అర్చయే చ్ఛ్రద్ధయా నిత్యం దేవ న్దహరవాసినమ్॥ 3.

ஶ்ரௌதஸ்மார்தாகமோக்தாநாம் க்ருஹீத்வாஸம்மதம்குரோ:।
அர்ச்சயேச்ச்ரத்தயாநித்யம் தேவந்தஹரவாஸிநம்॥ ௩.

தா-ம். வேதங்களிலும் தர்மசாஸ்த்ரங்களிலும் ஸ்ரீபாஞ்சராத்ரத்திலும் சொல்லப்பட்ட திருவாராதந க்ரமங்களில் தன்னுடைய ஆசார்யனுக்கு எது இஷ்டமோ? அந்த க்ரமத்தினால் ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீமந்நாராயணனை மிக ஸ்ரத்தையுடன் திநந்தோறு மாராதிக்கக்கடவன். ௩.

అర్చయేత్పూర్వవత్స్నాత్వా హరేస్సంపూజ్య విగ్రహమ్।
హోమం కుర్యా ద్విధానేన శ్రీమదష్టాక్షరేణ వై॥ ౪.
మన్త్రద్వయేన చ తథా హోతవ్యం విధినా హవిః।
సూక్తేన చ తథా హోమః పౌరుషేణ విధీయతే॥ ౫.
శత మష్టాక్షరా ద్ధోమో మన్త్రాభ్యాఞ్చ తథోదితః।
సూక్తేన ప్రత్యృచం హోమే హోతవ్యం దధినా హవిః॥ ౬.
తత్తన్నామ్నా తథైవైక ముద్దిశ్యావరణాన్సురాన్।
హుత్వా ప్రదక్షిణం కృత్వా నమస్కృత్వా జనార్దనమ్॥ ౭.
తస్మై తద్విగ్రహం దత్త్వా వృత్తిం సమ్యక్ప్రచోదయేత్।

அர்ச்சயேத்பூர்வவத்ஸ்நாத்வா ஹரேஸ்ஸம்பூஜ்யவிக்ரஹம்।
ஹோமங்குர்யாத்விதாநேந ஸ்ரீமதஷ்டாக்ஷரேணவை॥ ௪.
மந்த்ரத்வயேநசததா ஹோதவ்யம்விதிநாஹவி:।
ஸூக்தேநசததாஹோம: பௌருஷேணவிதீயதே॥ ௫.

சதமஷ்டாக்ஷராத்ஹோமோ மந்த்ராப்யாஞ்சததோதிதஃ|
ஸூக்தேநப்ரத்ய்ருசம்ஹோமே ஹோதவ்யம்விதிநாஹவிஃ|| சு.

தத்தந்நாம்நாததைவைக முத்திஶ்யாவரணைஸ்ஸுராந்|
ஹுத்வாப்ரதக்ஷிணங்க்ருத்வா நமஸ்க்ருத்வாஜநார்த்தநம்|| எ.

தஸ்மைதத்விக்ரஹந்தத்வா வ்ருத்திம்ஸம்யக்ப்ரசோதயேத்|

தா-ம். ஆசார்யன் ப்ராதஃகாலத்தில் ஸ்நாநம் முதலான நித்ய கர்மங்களை யநுஷ்டித்து, சிஷ்யனுக்கு எழுந்தருளப் பண்ணிக்கொடுக்கவேண்டிய திவ்யமங்கள விக்ரஹத்துக்குத் திருவாராதநம் கண்டருளப்பண்ணி, விதிபூர்வகமாய் ப்ரதிஷ்டை பண்ணப்பட்ட அக்நியில் ஸ்ரீமதஷ்டாக்ஷரத்திநுலும், த்வயத்திநுலும், புருஷஸூக்தத்திநுலும் ஹவிஸ்ஸை ஹோமம் பண்ணவேண்டியது. அதில் திருவஷ்டாக்ஷரத்திநுலும் த்வயத்திநுலும் நூறுநூறு ஆவ்ருத்தியும், புருஷஸூக்தத்துடைய பதிநாறு ருக்குக்களிநுல் பதிநாறு ஆவ்ருத்தியும் நியமத்துடன் ஹோமம் செய்யவேண்டியது. விமாநபாலகர்களென்ன, ஸுதர்ஶநாநந்த கருடாதிகளென்ன, பகவானை யநுஸரித்திருக்கிற இந்த தேவதைகளை யுத்தேசித்து ஒவ்வொரு ஆவ்ருத்தி அவ்வவர்கள் நாமங்களிநுலே ஹோமம் செய்யவேணும். ஹோமம் முடிந்த பின்பு பகவத் விக்ரஹத்தையும் அக்நியையும் ப்ரதக்ஷிணம் பண்ணி, தெண்டன் ஸமர்ப்பித்து, அந்த திவ்யமங்கள விக்ரஹத்தை சிஷ்யனுக்கு எழுந்தருளப்பண்ணிக் கொடுத்து எப்போது மாராதிக்கும்படி நன்று யுபதேசிக்கக்கடவன். எஉ.

యజ్ఞకర్మవిధానేన సమ్యక్స్నాత్వా గురుస్తదా ॥ ౮.
యాజయేద్వైష్ణవం భక్త్యా వైష్ణవాన్పరితోషయేత్।

யஜ்ஞகர்மவிதாநேந ஸம்யக்ஸ்நாத்வாகுருஸ்ததா|| அ.
யாஜயேத்வைஷ்ணவம்பக்த்யாவைஷ்ணவாந்பரிதோஷயேத்|

தா-ம். ஆசார்யன் யாத்யாஹ்நிக ஸ்நாநத்தைச் செய்து அப்பொழுது யாக ஸம்ஸ்காரத்தில் சொல்லிய விதிப்படி வைஷ்ணவனான சிஷ்யனைக்கொண்டு பகவதாராதநமாகிற யாகத்தைச் செய்விக்கவேண்டியது. அநந்தரம் பக்தியுக்தனாய் ஸ்ரீவைஷ்ணவர்களை யமுது செய்விக்க வேண்டியது. அஉ.

ఏవం యాగాన్తసంస్కారాః కర్తవ్యాస్సిద్ధిపద్ద్విజాః ॥ ౯
బ్రాహ్మణానాం విశేషేణ పారమ్పర్యాన్నిషేధతః।

ஏவம் யாகாந்தஸம்ஸ்காரா: கர்த்தவ்யா விதிவத்த்விஜா:|| ௬௰.
ப்ராஹ்மண்யாய விஶேஷேண பாரமைகாந்த்யஸித்தயே|

தா-ம். மஹர்ஷிகளே! இவ்விதமாய் தாபம் முதல் யாகம்வரையிலுமான ஸம்ஸ்காரங்களை ஸர்வேஶ்வரனிடத்திலேயே அந்தரங்கதை ஸித்திக்கைக்காக எல்லாரும் விதிபூர்வமாய்ச் செய்துகொள்ள வேணும். அதிலும் ப்ராஹ்மண்யத்துக்கு இவைகள் முக்யகாரணமாகையால் ப்ராஹ்மணர்களவஶ்யம் செய்துகொள்ளவேணும். ௬௰௧.

ఇతి శ్రీపరాశరస్మృతౌ వృత్తరఖణ్డే విశిష్టపరమధర్మశాస్త్రే
యాగసంస్కారవర్ణనన్నామ చతుర్థోఽధ్యాయః.

௪-வது அத்யாயம் முற்றிற்று.

௫-வது அத்யாயம்.

இனி பகவதாராதநமும் ஆஶ்ரமதர்மமும் சொல்லுகிறது.

శ్రీపరాశర ఉవాచ.

నిత్య మభ్యర్చయే ద్విష్ణుం పురాణం పురుషోత్తమమ్।
అప్సు వ్యోమ్ని తథాఽర్చాయాం వహ్నౌ హృది తథా గురౌ॥
త్రికాల మర్చయే ద్దేవం ప్రీతిమా న్సువిశేషతః।

ஸ்ரீ பராசர உவாச.

நித்யமப்யர்ச்சயேத் விஷ்ணும் புராணம்புருஷோத்தமம்|
அப்ஸு வ்யோம்நி ததார்ச்சாயாம் வஹ்நௌ ஹ்ருதி ததா குரௌ||
த்ரிகாலமர்ச்சயேத்தேவம் ப்ரீதிமாந்ஸுவிஶேஷத:|

தா-ம். ஸர்வவ்யாபியாய் ஸர்வோத்தமனாய் அநாதியாயுள்ள ஸ்ரீமந்நாராயணனை, ஜலத்திலும், ஆகாஶத்திலும், அர்ச்சாவிக்ரஹத்திலும், அக்நியிலும், ஹ்ருதயத்திலும், ஆசார்யனிடத்திலும் திநந்தோறும் மூன்று காலங்களிலும் மிகுந்த பக்தியுடையவனாய் அர்ச்சிக்கக்கடவன். ௧.

స్నానకాలే హరిం సమ్య గర్చయే జ్జలశాయినమ్॥ ௨.
సన్ధ్యాకాలే తథా వ్యోమ్ని పూజయే త్ప్రతిమాసు చ।

ప్రతిమాస్వర్చయే ద్దేవ మగ్నౌ హోమై స్తథాప్రభుమ్॥ ౩.
ప్రాణాగ్నిహోత్రసమయే।

ஸ்நாநகாலேஹரிமஸம்யக் பூஜயேஜ்ஜலசாயிநம்॥ உ.
ஸந்த்யாகாலேததாவ்யோம்நி பூஜயேத்ரவிமண்டலே।

ப்ரதிமாஸ்வர்ச்சயேத்தேவ மக்நௌஹோமைஸ்ததாப்ரபும்॥ ௩.
ப்ராணாக்நிஹோத்ரஸமயே।

தா-ம். அதில் ஸ்நாநகாலத்தில் ஜலத்தில் பள்ளிகொண்ட விஷ்ணுவை ஜலத்தில் ஆராதிக்கவேணும். ஸந்த்யாவந்தநம் செய்யும்போது ஆகாசத்தில் ஸூர்யமண்டலத்திலும், கீழ்ச்சொன்ன யாகாநுஷ்டாந காலத்தில் அர்ச்சாவிக்ரஹத்திலும், ஹோமகாலத்தில் அக்நியிலும், போஜநகாலத்தில் ப்ராணாஹூதி பண்ணும்போது ஹ்ருதயத்திலும் ஸர்வஸ்வாமியான அவனை ஆராதிக்கவேணும்.

జపే దష్టాక్షరం బుధః।
అష్టోత్తరశతంవాపి హ్యష్టావింశతిమేవవా॥ ౪.

యథాశక్తి జపే న్మన్త్రం నిత్య మేవ మతన్ద్రితః।
తదర్థంచి న్తయే న్నిత్యం యావద్దేహనిపాతనమ్। ౫.

ஜபேதஷ்டாக்ஷரம்புத:।
அஷ்டோத்தரஶதம் வாபி ஹ்யஷ்டாவிம்ஶதிமேவவா॥ ௪.

யதாஶக்திஜபேந்மந்த்ரம் நித்யமேவமதந்த்ரித:।
ததர்த்தம்சிந்தயேந்நித்யம் யாவத்தேஹநிபாதநம்॥ ௫.

தா-ம். சரீரம் நசிக்குமளவும் தினந்தோறும் திருவஷ்டாக்ஷரத்தை நூற்றெட்டு தரமாவது இருபத்தெட்டு தரமாவது தன் சக்திக்கு அநுகுணமாக ஜபித்து அதினர்த்தத்தையும் அநுஸந்தாநம் பண்ணக்கடவன். ௫௨.

అలాభేప్రతిమాయాస్తు శుచౌ దేశే మనోహరే।
స్థణ్డిలే పురుషం ధ్యాత్వా పూజయే న్మనసైవతు।

அலாபேப்ரதிமாயாஸ்து ஶுசௌதேஶேமநோஹரே।
ஸ்தண்டிலேபுருஷம்த்யாத்வா பூஜயேந்மநஸைவது। ௬.

தா-ம். அர்ச்சாவிக்ரஹம் அகப்படாவிடில் பரிசுத்தமாய் அழுகாய் புல்லு முதலானவைகளில்லாத தேசத்திலே சித்ரத்தை யெழுதி அதில் பகவானை மனதிருல் த்யானிக்கவேண்டியது. ௬ உ.

జపే ద్వయ మన్త్రరత్నం ధ్యాయ న్సర్వగతం హరిమ్। •

ஜபேத்த்வயம்மந்த்ராத்நம் த்யாயந்ஸர்வகதம்ஹரிம்|

தா-ம். மந்த்ரங்களில் உத்க்ருஷ்டமான த்வயமந்த்ரத்தை ஸர்வவ்யாபியான பரமாத்மாவை ஸ்மரித்துக்கொண்டு ஜபிக்கவேணும்.

పాషణ్డినః పాశుపతా న్వికర్మస్థా ననీశ్వరాన్॥ ౭.
నసంభాషేత సతతం వాఙ్మాత్రేణాపినార్చయేత్।

பாஷண்டிநஃபாசுபதாந் விகர்மஸ்தாநநீச்வராந்|| ௭.
நஸம்பாஷேதஸததம் வாங்மாத்ரேணாபிநார்ச்சயேத்|

தா-ம். பகவத் பாகவதர்களோடு த்வேஷம் பண்ணித் திரிகிற பாஷண்டிகளோடும், பாசுபதம் என்கிற சைவமதத்தை யவலம்பித்தவர்களோடும், கர்மப்ரஷ்டர்களோடும் ஈச்வரனொருவனில்லையென்று சொல்லுகிற நாஸ்திகர்களோடும் எப்போதும் ஸம்பாஷிக்கவுங் கூடாது; அவர்களை உத்கர்ஷித்துச் சொல்லவுங் கூடாது. ௭ உ.

ఉపవీతం శిఖాబన్ధ మూర్ధ్వపుణ్డ్రం తథైవచ॥ ౮.
పద్మాక్షమాలాం కౌశేయం సతతం ధారయే ద్ద్విజః।

உபவீதம்சிகாபந்த மூர்த்வபுண்ட்ரம்ததைவச|| ௮.
பத்மாக்ஷமாலாம்கௌசேயம் ஸததம்தாரயேத்த்விஜஃ|

தா-ம். ப்ராஹ்மணன் பூணூலும் குடுமியும் ஊர்த்வபுண்ட்ரமும் தாமரையணி மாலையும் வெண்வஸ்திரமும் எப்போதுந்தரிக்கவேணும். ௮ உ.

ఏకోపవీతం ధార్యం స్యా ద్యతీనాం బ్రహ్మచారిణామ్॥ ౯.
గృహస్థానాం వనస్థానా ముపవీతద్వయం విదుః।

ஏகோபவீதம்தார்யம்ஸ்யாத் யதீநாம்ப்ரஹ்மசாரிணாம்|| ௯.
க்ருஹஸ்தாநாம்வநஸ்தாநா முபவீதத்வயம்விதுஃ|

தா-ம். அதில் ப்ரஹ்மசாரிக்கும் ஸந்யாஸிக்கும் ஒரு பூணூலும், க்ருஹஸ்தனுக்கும் வாநப்ரஸ்தனுக்கும் இரண்டு பூணூலும் தார்யங்களென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். ௯ உ.

మౌఞ్జీ మజినదణ్డౌచ బ్రహ్మచారీధరేత్సదా। ౧౦.

மௌஞ்ஜீமஜிநதண்டௌச ப்ரஹ்மசாரீதரேத்ஸதா॥ ௧௦.

தா-ம். முஞ்சமென்னும் புல்லினால் பின்னப்பட்ட மௌஞ்சியென்பதையும் க்ருஷ்ணாஜிநத்தையும் பாலாசம் முதலான தண்டத்தையும் ப்ரஹ்மசாரி தரிக்கக்கடவன். ௧௦.

కటిసూత్రఞ్చ కౌపీనం శుక్లవస్త్రద్వయం శుభమ్।
వలయాద్యఙ్గులీయాది గృహస్థానాంవిధీయతే॥ ౧౧.

கடிஸூத்ரஞ்சகௌபீநம் சுக்லவஸ்த்ரத்வயம்சுபம்।
வலயாத்யங்குலீயாதி க்ருஹஸ்தாநாம்விதீயதே॥ ௧௧.

தா-ம். அரைநாண், கௌபீநம், மங்களகரமான இரண்டு வெண் வஸ்த்ரம், கைவளை, மோதிரம முதலான ஆபரணங்கள், இவைகளெப் போதும் க்ருஹஸ்தர்களுக்கு தார்யங்களாக விதிக்கப்பட்டன. ௧௧.

శ్మశ్రులోమ జటాశ్చైవ తథా వల్కలధారణమ్।
చీరాజినతపోఽరణ్యం వనస్థస్య విధీయతే॥ ౧౨.

ஸ்மஸ்ருலோமஜடாசைவ ததாவல்கலதாரணம்।
சீராஜிநதபோரண்யம் வநஸ்தஸ்யவிதீயதே॥ ௧௨.

தா-ம். மீசை மயிர் ஜடை இவைகளை க்ஷௌரஞ் செய்யாமல் வளர்த்தல், அரையில் மரவுரியைத் தரித்தல், மரவுரியாவது க்ருஷ்ணாஜிநமாவது உத்தரீயமாகத் தரித்தல், தபஸ்ஸுபண்ணுதல், காட்டில் வஸித்தல் இவைகள் வாநப்ரஸ்தனுக்கு விதிக்கப்பட்டன. ௧௨.

త్రిదణ్డ ముపవీతఞ్చ శిక్యంకాషాయమమ్బరమ్।
కమణ్డలు భైక్షచర్యా యతీనాన్తువిధీయతే॥ ౧౩.

த்ரிதண்டமுபவீதஞ்ச சிக்யங்காஷாயமம்பரம்।
கமண்டலுர்பைக்ஷ சர்யா யதீநாந்துவிதீயதே॥ ௧௩.

தா-ம். த்ரிதண்டம், யஜ்ஞோபவீதம், பிக்ஷையை வாங்குகைக்காக முடியிட்டு வைத்திருக்கும் சிக்யம், காஷாயவஸ்த்ரம், கமண்டலு இவைகளைத் தரித்தல், பிக்ஷாடநஞ் செய்தல் இவை யதிகளுக்கு விதிக்கப்பட்டன. ௧௩.

సాధారణస్తు సర్వేషాంధర్మస్తు మునిభిస్స్మృతమ్।
అభక్ష్యభక్షణం హింసా పరస్త్రీష్వభిలాషితా॥ ౧౪.
పరేషాందోషకథన మనర్థాయప్రకల్పతే।

ஸாதாரணஸ்து ஸர்வேஷாம் தர்மஸ்துமுநிபிஸ்ஸ்ம்ருதம்।
அபக்ஷ்யபக்ஷணம்ஹிம்ஸா பரஸ்த்ரீஷ்வபிலாஷிதா॥ ௧௪.
பரேஷாம்தோஷகதந மநர்த்தாயப்ரகல்பதே।

தா-ம். இந்த நாலு ஆஶ்ரமத்திலுள்ளவர்களுக்கும் நிஷித்தமான கர்மங்களைச் செய்யாதொழிவது பொதுவான தர்மமென்று ருஷிகள் சொன்னார்கள். நிஷித்தங்களாவது வென்றால்-புஜிக்கத்தகாதென்று சாஸ்த்ரத்திலும் சிஷ்டாசாரத்திலும் கழித்து விட்டதை புஜித்தல், ஒரு ஜீவனைக் கொல்லுதல், பரஸ்த்ரீயை இச்சித்தல், பிறர் தோஷத்தைச் சொல்லுதல், மற்றும் பிறர் வருத்தமுறும் வ்யாபாரத்தைச் செய்தல் இவைகள். ௧௪உ.

పూర్వాశ్రమాత్తురీయస్తు నారీసఙ్గం విసర్జయేత్॥ ౧౫.
గృహస్థశ్చ వనస్థశ్చ స్వదారనిరతావుభౌ।

பூர்வாஶ்ரமாத்துரீயஸ்து நாரீஸங்கம்விஸர்ஜயேத்॥ ௧௫.
க்ருஹஸ்தஶ்சவநஸ்தஶ்ச ஸ்வதாரநிரதாவுபௌ।

தா-ம். க்ருஹஸ்தாஶ்ரமத்தையும் வாநப்ரஸ்தாஶ்ரமத்தையும் விட்டு ஸந்யாஸியாகும்போது தன் ஸ்த்ரீயை விட்டுவிட வேண்டியது. க்ருஹஸ்தனும் வாநப்ரஸ்தனும் தங்கள் ஸ்த்ரீகளிடத்திலேயே போகேச்சையுடையவர்களாக ஆகக்கடவர்கள். ௧௫உ.

శ్రుతిస్మృత్యుదితం సమ్యఙ్నిత్య మాచార మాచరేత్॥ ౧౬.

ஶ்ருதிஸ்ம்ருத்யுதிதம் ஸம்யங் நித்யமாசாரமாசரேத்॥ ௧௬.

தா-ம். எந்த வர்ணத்துக்கு எந்த ஆஶ்ரமத்துக்கு எந்த ஆசாரம் வேதத்திலும் தர்மசாஸ்த்ரத்திலுஞ் சொல்லியிருக்கிறதோ? அந்த வர்ணத்தில் அந்த ஆஶ்ரமத்திலுள்ளவன் அந்த ஆசாரத்தைச் செய்யக்கடவன். ௧௬உ.

பாஷண்டிலக்ஷணம்.

శ్రుతిస్మృత్యుదితం నిత్యం యస్తు నాచరతి ద్విజః।
స పాషణ్డీతి విజ్ఞేయ స్సర్వకర్మసుగర్హితః॥ ౧౭.

ச்ருதிஸ்ம்ருத்யுதிதம் நித்யம்யஸ்த்வாசரதித்விஜ:|
ஸபாஷண்டஇதிவிஜ்ஞேயஸ் ஸர்வகர்மஸுகர்ஹித:|| ௧௭.

தா-ம். வேதங்களிலும் தர்மசாஸ்த்ரங்களிலும் எதை விசேஷ தர்மமென்றும் நித்யமாக அநுஷ்டிக்கத் தக்கதென்றும் சொல்லியிருக்கிறதோ? அதை எவனொருவன் அநுஷ்டியாமலிருக்கிறானோ? அந்த ப்ராஹ்மணனைப் பாஷண்டியென்று அறியவும். அவன் ஒரு கர்மங்களிலு முபயோகிக்கமாட்டான். ௪௭.

ப்ரஹ்மசாரி செய்யவேண்டும் நித்யக்ருத்யம்.

సాయం ప్రాత స్సమిద్ధోమ స్స్వాధ్యాయాధ్యయనం జపః।
గృహస్థానాంగృహే భైక్షవిధిస్తుబ్రహ్మచారిణామ్॥ ౧౮.

ஸாயம்ப்ராதஸ்ஸமித்ஹோமஸ் ஸ்வாத்யாயாத்யயநம்ஜப:|
க்ருஹஸ்தாநாம்க்ருஹேபைக்ஷவிதிஸ்துப்ரஹ்மசாரிணாம்||௧௮.

தா-ம். உதயகாலத்திலும் ஸாயங்காலத்திலும் பலாசம்ஸமித்தினால் ஹோமம், அதாவது - ஸமிதாதாநம், வேதாத்யயநம், காயத்ரீ திருவஷ்டாக்ஷரம் முதலிய மஹாமந்த்ரங்களின் ஜபம், க்ருஹஸ்தர்களுடைய க்ருஹத்தில் பிக்ஷைகொள்ளுதல்,—அதாவது சாப்பிடுகைக்காக நாலு ஐந்து க்ருஹஸ்தர்களிடம் யாசித்து அந்நத்தை ஸம்பாதித்தல், இவைகளை ப்ரஹ்மசாரி நித்யமாகச் செய்யவேண்டும்.

க்ருஹஸ்தன் செய்யவேண்டும் நித்யக்ருத்யம்.

సాయంప్రాతశ్చ జుహుయా దగ్నిహోత్రం సదా గృహీ।
తథైవ పఞ్చయజ్ఞాది యజ్ఞహోమం సమాచరేత్॥ ౧౯

ஸாயம்ப்ராதஸ்சஜுஹுயா தக்நிஹோத்ரம்ஸதாக்ருஹீ|
ததைவபஞ்சயஜ்ஞாதி யஜ்ஞஹோமமஸமாசரேத்|| ௧௯.

தா-ம். க்ருஹஸ்தன் தினந்தோறும் உதயகாலம் சாயங்காலங்களில் அக்நிஹோத்ரமென்கிற ஹோமத்தைச் செய்யக்கடவன். ப்ரதிதினம் ப்ரஹ்மயஜ்ஞமும், தேவயஜ்ஞமும், பித்ருயஜ்ஞமும், பூதயஜ்ஞமும், மநுஷ்யயஜ்ஞமும் ஆகிற பஞ்சமஹாயஜ்ஞங்களைச் செய்யக்கடவன். ப்ரஹ்மயஜ்ஞமாவது - வேதாத்யயநம்; தேவயஜ்ஞமாவது - ஹோமம் (ஔபாஸநம்); பித்ருயஜ்ஞமாவது - பித்ருதர்ப்பணம்; பூதயஜ்ஞமாவது - காகம் முதலிய பூதங்களுக்கு அந்நத்தினால் பலியிடுதல்; மநுஷ்யயஜ்ஞமாவது - அதிதியைப் பூஜித்தல். அதிதியென்பவன் - தான் போஜநம் செய்யும் ஸமயத்தில் வந்த வழிப்போக்கன்; அவன் ஜாதி

யில் தனக்குக் குறைந்திருந்தால் அதிதியாகமாட்டான். அப்படியே தர்சபௌர்ண மாஸங்கள் முதலாகிய யஜ்ஞங்களையும் செய்யக் கடவன். ௧௯.

ஸந்யாஸிசெய்யவேண்டும் நித்யக்ருத்யம்.

స్నానం త్రిసంధ్యమప్యాహు యతీనాన్తు విధీయతే।
జపమౌనతపోయోగ బ్రహ్మచర్యదమా స్తథా॥ ౨౦.

కామక్రోధౌ తథాలోభ మోహమానమదాం స్త్యజేత్।
మత్సరద్వేషరూక్షోక్తి నిద్రాలస్యాదివర్జయేత్॥ ౨౧.

ஸ்நாநம்த்ரிஸந்த்யமபிஹி யதீநாந்துவிதீயதே|
ஜபமௌநதபோயோக ப்ரஹ்மசர்யதமாஸ்ததா|| உ0.
காமக்ரோதௌ ததாலோப மோஹமாநமதாம்ஸ்த்யஜேத்|
மத்ஸரத்வேஷரூக்ஷோக்தி நித்ராலஸ்யாதிவர்ஜயேத்|| உக.

தா-ம். ஸந்யாஸி உதயம், மத்யாஹ்நம், ஸாயங்காலம் ஆகிய இம்மூன்று காலங்களிலும் ஸ்நாநம் செய்யவேணும். திருவஷ்டாக்ஷரம் முதலிய மஹாமந்த்ரங்களை ஜபிக்கவேணும். வ்யர்த்தமாய்ப் பேசக்கூடாது. சரீரமிளைக்கும்படி உபவாஸம் சாந்த்ராயணம் முதலானவைகளைச் செய்யவேண்டும். பரமாத்மாவினிடத்தில் பக்திசெய்யவேணும். ஸ்த்ரீயோடு ஸம்பாஷணம் முதலியவைகளும் செய்யக்கூடாது. இந்த்ரியங்களை அதன் வழிகளில் யதேச்சையாய்ப் போகவொட்டாமல் அடக்கவேணும். சுகத்திலாவது பந்துக்களிடத்திலாவது ப்ரீதிவைக்கக் கூடாது. ஒருவரைக் கோபிக்கக் கூடாது. பிறர் வஸ்துவை ஆசைபடக்கூடாது. நச்வரமான இந்த லோகத்தை சாச்வதமென்றெண்ணி மோஹிக்கக்கூடாது. நான் பெரியனென்கிற கர்வம்கூடாது. ஒருவன் பரிஹாஸம் செய்தால் அதில் வெட்கப்படக்கூடாது. ஒருவன் மேன்மையைக்கண்டு பொறாமையடையக்கூடாது. ஒருவரோடு த்வேஷம் செய்யக்கூடாது. ஒருவனை நோவ வார்த்தை சொல்லக்கூடாது. தூக்கம், சோம்பல் இவை முதலியவைகளை விட்டுவிடவேணும். உக.

ఇతి శ్రీపరాశరస్మృత్యాముత్తరఖణ్డే విశిష్టపరమధర్మశాస్త్రే
భగవదారాధనాశ్రమధర్మవర్ణనన్నామపఞ్చమోఽధ్యాయః॥

௫-வது அத்யாயம் முற்றிற்று.

௬-வது அத்யாயம்.

శ్రీపరాశర ఉవాచ.

విస్తరేణ బ్రవీమ్యత్ర విష్ణో రాశ్రయణక్రియామ్।

ஸ்ரீபராசர உவாச.

விஸ்தரேணப்ரவீம்யத்ர விஷ்ணோராஶ்ரயணக்ரியாம்|

தா-ம்.—ஸ்ரீபராசரமஹர்ஷி சொல்லுகிறார்.—ருஷிகளே! முன் சுருக்கமாகச்சொன்ன பகவதாஶ்ரயணத்தை இந்த அத்யாயத்தில் விஸ்தாரமாகச்சொல்லுகிறேன் கேளுங்கள். ௧.

ఉత్థాయ పశ్చిమే యామ ఆచమ్య ప్రయతాత్మవాన్॥ ౧.
నివేశితే శుచౌ దేశే సమాసీన స్సుఖాసనే।
ఆత్మానం స్వశరీరఞ్చ పరేశమనుచిన్తయేత్॥ ౨.

உத்தாயபஶ்சிமேயாம ஆசம்யப்ரயதாத்மவாந்|| ௧.
நிவேஶிதேசுசௌதேசே ஸமாஸீநஸ்ஸுகாஸநே|
ஆத்மாநம்ஸ்வஶரீரஞ்ச பரேசமநுசிந்தயேத்|| ௨.

தா-ம்.—இரவில் நான்காவது யாமத்திலெழுந்திருந்து கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு ஆசமநமசெய்து எறும்புமுதலிய புழுக்களில்லாமல் பரிசுத்தமாயிருக்கிற இடத்தில் ம்ருதுவாயிருக்கிற ஆஸநத்தையிட்டு அதிலுட்கார்ந்து மநஸ்ஸைப் பெண்டாட்டி பிள்ளை முதலிய விஷயங்களிற் செல்லாமற்படிசெய்து பின்பு தன்னையும் தன்னுடைய சரீரத்தையும் தனக்கு ஸ்வாமியான பரமாத்மாவையும் த்யாநம் செய்யக்கடவன். ௨.

சரீரத்தை த்யாநிக்கும் விதம் சொல்லுகிறது.

శుక్రశోణితసంభూతం శరీరం పాఞ్చభౌతికమ్।
శబ్దాదివిషయోపేతై ర్యుత మేకాదశేన్ద్రియైః॥ 3.
అవ్యక్తబుద్ధ్యహఙ్కారదశకార్యగుణై ర్యుతమ్।
వసామూత్రపురీషాస్థి చర్మమాంససిరాయుతమ్॥ ౪
ద్వేషద్భిః కామకారాద్యై రనిశం పీడితాన్తరమ్।
తాపత్రయమహాజ్వాలవహ్నిభిః పరివేష్టితమ్॥ ౫.

ఈషణాత్రయతృష్ణాభి ర్నిబద్ధం మలపూరితమ్।
ద్విసప్తతిసహస్రాభి ర్నాడీభిః పరివేష్టితమ్॥

சுக்ரசோணிதஸம்பூதம் சரீரம்பாஞ்சபௌதிகம்|
சப்தாதிவிஷயோபேதைர் யுதமேகாதசேந்த்ரியை:|| ௩.

அவ்யக்தபுத்த்யஹங்கார தத்வசார்யகுணைர்யுதம்|
வஸாமூத்ரபுரீஷாஸ்தி சர்மமாம்ஸஸிராயுதம்|| ௪.

த்விஷத்பிஃகாமகாராத்யை ரதிசம்பீடிதாந்தரம்|
தாபத்ரயமஹாஜ்வாலவஹ்நிபிஃ பரிவேஷ்டிதம்|| ௫.

ஈஷணாத்ரயத்ருஷ்ணாபிர் நிபத்தம்மலபூரிதம்|
த்விஸப்ததிஸஹஸ்ராபிர் நாடீபிஃபரிவேஷ்டிதம்|| ௬.

தா-ம்.—இந்தச் சரீரமானது சுக்ரமென்கிற புருஷனுடையவீர்யத்தினாலும், சோணிதமென்கிற ஸ்த்ரீயினுடைய ரஜஸ்ஸினாலுமுண்டானது. மண், ஜலம், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்கள் சேர்ந்து இவ்விதமாய் விகாரத்தை யடைந்திருக்கின்றன. இது த்வக், சக்ஷுஸ், ஶ்ரோத்ரம், ஜிஹ்வை, க்ராணம், என்கிற ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்களும், வாக், பாணி, பாதம், பாயு, உபஸ்தம், என்கிற ஐந்து கர்மேந்த்ரியங்களும், மநஸ்ஸு என்கிற ஆந்தரிந்த்ரியமும் ஆகிய பதினொரு இந்த்ரியங்களோடுகூடியிருக்கிறது. த்வக் என்பது-வெம்மை குளிர்ச்சி முதலிய ஸ்பர்சங்களையறிகைக்கு ஹேதுவாய் சரீரமெங்கும் வ்யாபித்திருக்கும். சக்ஷுஸ் என்பது—வெண்மை, நீலம், முதலிய ரூபங்களை யறிகைக்கு ஸாதகமாய்க் கண்ணில் கருவிழியின் மத்தியிலிருக்கும், ஶ்ரோத்ரம் என்பது—சப்தத்தைக் கேட்கஸாதகமாய் செவிக்குள்ளிருக்கும், ஜிஹ்வை என்பது—தித்திப்பு, கைப்பு முதலிய ரஸங்களை யறிகைக்குக் காரணமாய் நாவின் நுனியிலிருக்கும். க்ராணம் என்பது—பரிமளம், துர்க்கந்தம் முதலியவைகளை யறிகைக்குக் காரணமாய் மூக்கின் நுனியிலிருக்கும். இவ்வையைந்தும் அறிவுக்கு ஸாதகமாகையால் ஜ்ஞானேந்த்ரியங்களென்று சொல்லப்படுகின்றன. வாக் என்பது—வார்த்தை சொல்லுகைக்குக் காரணமாய் கடைவாய்முதலிய இடங்களிலிருக்கும் பாணி என்பது-ஒன்றை எடுத்தல், பிடித்தல்முதலியவை செய்கைக்கு ஹேதுவாய் இரண்டுகைகளின் தலங்களிலிருக்கும். பாதம் என்பது—நடக்கைக்கு ஹேதுவாய் இரண்டு பாதங்களிலிருக்கும். பாயு என்பது—மலத்

தை விடுகைக்கு ஹேதுவாய்க் குதத்திலிருக்கும். உபஸ்தமென்பது—ஸ்த்ரீபுருஷர்கள் ஒருவர்க்கொருவர் புணர்ந்து ஸுகத்தை யநுபவிக்கைக்கு ஸாதகமாய் ஆண்பெண்குறிகளிலிருக்கும். இவ்வைந்தும் செயலுக்குஸாதகமாகையால் கர்மேந்த்ரியங்களென்றுசொல்லப்படுகின்றன. மநஸ்ஸு என்பது—எல்லாவறிவுக்கும் ஸாதகமாய்சரீரத்தினுள்ளே யிருக்கும். ஆகையால் இதற்கு ஆந்தரிந்த்ரியமென்று பெயர். இப்பதினொன்றும் தந்தம் வ்யாபாரத்தோடு கூடியதாய்இந்தச் சரீரத்தில் வஸிக்கின்றன. மூலப்ரக்ருதி, புத்தி என்கிற மஹத்தத்வம், அஹங்காரம், அஹங்காரதத்வத்தில் நின்று முண்டான (சப்ததந்மாத்ரை, ஸ்பர்சதந்மாத்ரை, ரூபதந்மாத்ரை, ரஸதந்மாத்ரை, கந்ததந்மாத்ரை ஆகிய ஐந்து தந்மாத்ரைகள், ப்ருதிவீ, ஜலம், தேஜஸ்ஸு, வாயு, ஆகாசம், ஆகிய ஐந்து பூதங்கள், இந்த) பத்து தத்வங்கள், ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம், ஆகிய மூன்று குணங்கள் இவைகளோடுங் கூடியதாயிருக்கு மிந்தச் சரீரம், சவுர்நீர், மூத்ரம், விஷ்டை, எலும்பு, தோல், மாம்ஸம், நரம்பு, இவைகளோடும் கூடியிருக்கிறது. தனக்கு சத்ருக்களாகிற காமம் (ஒரு வஸ்துவில் ஆசை), க்ரோதம் (ஆசைப்பட்ட வஸ்துவை அகப்படாமல் செய்தவர்களிடத்திலுண்டான கோபம்), மோஹம் (செய்யவேண்டியவை செய்யத்தகாதவைகளை உள்ளபடி யறியாமை), லோபம் (அயலாருடைய பொருளை யாசைப்படல்), மதம் (தானே பெரியனென்கிற கர்வம்), மாத்ஸர்யம் (அயலார் மேன்மையைக்கண்டு பொறாமை), இவைகளினாலெப்போதும் நொந்திருக்கிறது. ஆத்யாத்மிகம் (சரீரத்தில் வாதம் பித்தம் ச்லேஷ்மம் இந்த தாதுக்களினுடைய உயர்வு தாழ்வுகளினாலுண்டான ஜ்வரம் முதலிய உபத்ரவம்), ஆதிபௌதிகம் (பாம்பு தேள் முதலானவைகளினாலுண்டான உபத்ரவம்), ஆதிதைவிகம் (மின்னல் இடி முதலானவைகளினாலுண்டான உபத்ரவம்) என்கிற மூன்றுவிதமான தாபங்களாகிற பெரிய எரிச்சலோடு கூடிய மூன்றக்நிகளினால் நாலுபக்கங்களிலும் சூழப்பட்டிருக்கிறது. புத்ரேஷணை (பிள்ளையினிடத்திலாசை), வித்தேஷணை (தநத்திலாசை), லோகேஷணை (ஸ்வர்க்கம் முதலான லோகங்களிலாசை) என்கிற மூன்று ஈஷணைகளினால் நெருக்குண்டிருக்கிறது. அழுக்கினால் நிறைந்திருக்கிறது. எழுபத்தீராயிரம் நரம்புகளினால் சுற்றப்பட்டிருக்கிறது. என்று இவ்விதமாய் சரீரத்தின் நிஹீநதையையும் நச்வரதையையும், இதன் ஸம்பந்தம் ஆத்மாவையழித்து விடுமென்பதையும் நன்றாய் அநுஸந்திக்கக்கடவன். ௬

ஆத்மாவை த்யாநிக்கும் விதம் சொல்லுகிறது.

హృత్పుణ్డరీకమధ్యేత్ర వసామి ప్రభయా జ్వలన్।
దేహేన్ద్రియమనఃప్రాణధీభ్యోఽన్యోఽనన్యసాధనః॥ ౭.

పఞ్చవింశాత్మకో నిత్యో మకారార్థస్సమాధిమాన్।
భగవచ్ఛేషభూతోఽహ మనన్యార్హోఽచితః పరః॥ ౮.

నిర్వికారో హ్యణు ర్నిత్యః ప్రకృతే రవ్యయః పరః।
అజడోఽవ్యక్తరూపశ్చ జ్ఞానానన్దస్వరూపభాక్॥ ౯.

ఏకరూపో వ్యాప్తిశీలః క్షేత్రీ క్షేత్రజ్ఞ ఏవ చ।
జ్ఞాతా కర్తా చ భోక్తా చ అహం ప్రత్యయగోచరః॥ ౧౦.

అదాహ్యోఽక్లేద్యోఽచ్ఛేద్యో హ్యశోష్యోఽక్షర ఏవ చ।
ఏవం దేహేన్ద్రియాద్యన్య మాత్మానం సతతం స్మరేత్॥ ౧౧.

ஹ்ருத்புண்டரீகமத்யேத்ரவஸாமிப்ரபயாஜ்வலந்|
தேஹேந்த்ரியமந:ப்ராணதீப்யோந்யோநந்யஸாதந:|| எ.

பஞ்சவிம்சாத்மகோநித்யோ மகாரார்த்தஸ்ஸமாதிமாந்|
பகவச்சேஷபூதோஹ மநந்யார்ஹோசித:பர:|| அ.

நிர்விகாரோஹ்யணுர்நித்ய: ப்ரக்ருதேரவ்யய:பர:|
அஜடோவ்யக்தரூபஸ்ச ஜ்ஞாநாநந்தஸ்வரூபபாக்|| கூ,

ஏகரூபோவ்யாப்திசீல: க்ஷேத்ரீக்ஷேத்ரஜ்ஞஏவச|
ஜ்ஞாதாகர்த்தாசபோக்தாச அஹம்ப்ரத்யயகோசர: ௧0.

அதாஹ்யோக்லேத்யகோச்சேத்யோஹ்யசோஷ்யோக்ஷரஏவச|
ஏவம்தேஹேந்த்ரியாத்யந்யமாத்மாநம்ஸததம் ஸ்மரேத்|| ௧௧.

தா-ம்.—இந்த ஹேயமான சரீரத்தில் மார்பின்நடுவில் தாமரைமொக்குபோலிருக்கிற மாம்ஸரூபமான அவயவத்தின் நடுவில் நான் வாஸம் பண்ணுகிறேன். ஹேயமாய் பருமனாய்க்காண்கிற இந்தச்சரீரம், இதைக்காட்டிலும் ஸூக்ஷ்மமான இந்த்ரியங்கள், மநஸ்ஸு, இவைகளொழிந்தகாலத்திலும் காண்கிற ப்ராணன், புத்தி, இவைகளைக்காட்டிலும் வேறாய்த் தன்னுடைய ப்ரகாசத்திற்கு வேறொரு

ஸாதகம் வேண்டாமல் தீபம்போல் தனக்குத்தானே ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறேன்; நான் ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், ஐந்து தந்மாத்ரைகள், ஐந்துபூதங்கள், பதினொரு இந்த்ரியங்கள் ஆகிய இருபத்துநாலு தத்வங்கள் கழிந்து இருபத்தைந்தாம் தத்வமாய், க-முதல் இருபத்தைந்தாவது அக்ஷரமான ம-என்கிற அக்ஷரத்தினால் சொல்லப்பட்டவனாய், (ஜ்ஞாநஸ்வரூபனாய்). உத்பத்தி விநாசமில்லாதவனாயிருக்கிறேன். பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்கைக்கு யோக்யமானபக்தியோகத்தை யநுஷ்டிக்கைக்கு யோக்யதையுடையவன்; பகவானான ஸ்ரீயஃபதிக்கே அடியன், வேறொருவனுக்கு அடிமைப்படயோக்யனல்லன்; ஜ்ஞாநமில்லாத அசித்தைக்காட்டிலும் விலக்ஷணமாயிருக்கிறவன், அதெப்படியெனில்: அசித்து, சிறிதாகவும் பெரிதாகவும் பரிணமத்தை யடையும்; பெரிதாகக்காணும்; பிறக்கும்; அழியும்; மூலப்ரக்ருதியைக்காட்டிலும் கீழ்ப்பட்டிருக்கும்; ஜ்ஞாநமில்லாமலிருக்கும்; எல்லாராலும் காணக்கூடியதாய் ஜடமாயிருக்கும், பலவிதமாயிருக்கும்; ஒன்றால்வ்யாபிக்கப்பட்டிருக்கும். ஆத்மாவானநான் எப்போதும் ஏகரூபமாய், அணுவாய், பிறப்பிறப்பில்லாதவனாய், மூலப்ரக்ருதிக்கும்மேலாய், ஜ்ஞாநமுடையவனாய், எல்லாருக்கும் ஸ்பஷ்டமாகக்காணக்கூடாதவனாய்: ஜ்ஞாநாநந்தங்களையே ஸ்வரூபமாகவுடையவனாயிருக்கிறேன். பல்விதமின்றிக்கே மற்ற ஆத்மாக்கள் போலவிருக்கின்றேன்; எல்லாவஸ்துக்களிலும் உள்ளே ப்ரவேசிக்க சக்தியுடையனாயிருக்கிறேன். நான் சரீரத்தையுடையவன். சரீரத்தை இது வென்றும் எனது என்றும் அறிகிறேன். அடையவேண்டும் பலத்தையும் அதற்குபாயத்தையுமறிந்து அவ்வுபாயத்தைச் செய்து அந்த பலத்தை யநுபவிக்கிறேன். அஹம் என்று நானே தோற்றுகிறேன். அழிவில்லாமைக்குக் காரணமென்னெனில்; ஜலம், தீ, வாயு, ஆயுதம், இவைகளினால் நனைக்கவும் எரிக்கவும் வறட்டவும் வெட்டவும் செய்யத்தகாதவன். இவைகள் உள்ளே நுழைந்து தந்தம் கார்யங்களைச் செய்யவேணும்; ஆத்மா மிகவும் ஸூக்ஷ்மமாகையால் இதற்குள்ளே ப்ரவேசிக்க அவைகளுக்கு ஸாமர்த்யமில்லை. ஆகையாலழிவில்லை. என்று இவ்விதமாக தேக முதலியவைகளைக்காட்டிலும் வேறுபட்டவனாக ஆத்மாவை எப்போதும் த்யாநம் செய்யவேண்டும.

ఇత్యాత్మానం దృఢం జ్ఞాత్వా స్వాత్మన్యేవ మనుచిన్తయేత్।
పరే వ్యోమ్ని పరేశానం తథా ధ్యాయేదతన్ద్రితః॥ ౧౨.

இத்யாத்மாநம்க்ருடம் ஜ்ஞாத்வா ஸ்வாத்மேசமநுசிந்தயேத்|
பரேவ்யோம்நிப்ரேசாநம்ததாவ்யூஹாதிபேதத:|| கஉ.

தா-ம்.—இப்படி ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை நன்றாயறிந்து பின்பு தனக்கு ஸ்வாமியாய் ஸ்ரீவைகுண்டத்திலும் திருப்பாற்கடல் முதலிய வ்யூஹங்களிலும் ஸமஸ்த ப்ராணிகளுக்கும் நியாமகனாயெழுந்தருளியிருக்கிற பரமாத்மாவை த்யாநம் செய்யக்கடவன். கஉ.

லீலா விபூதியை த்யாநிக்கும் விதம்.

అణ్డ మణ్డగతాన్లోకాన్ తదన్తర్గతవిగ్రహాన్।
తదంశాంశసమూహం తదన్తర్యామిత్వ మాత్మనః॥ ౧౩.
దశోత్తరా నావరణాన్ తదన్తస్థచరాచరాన్।
ప్రధానం పురుషంచైవ త్రిగుణం తత్ర సంభవమ్॥ ౧౪.

அண்டமண்டகதாந்லோகாந் ததந்தர்கதவிக்ரஹாந்|
ததம்சாம்சஸமூஹம்த தந்தர்யாமித்வமாத்மந:|| கங.
தசோத்தராநாவரணாந் ததந்தஸ்தசராசராந்|
ப்ரதாநம்புருஷம்சைவ த்ரிகுணம்தத்ரஸம்பவம்|| கச

தா-ம்.—பகவானுடைய விபூதியான ப்ரஹ்மாண்டத்தையும், அதிலுள்ள ஸத்யலோகம் முதலிய பதினாலுலோகங்களையும், ஆஸ்ரித ஸம்ரக்ஷணார்த்தமாக அங்கங்கே எழுந்தருளியிருக்கிற அநிருத்தன் முதலிய அவதாரங்களையும், அவருடைய அம்ச பூதர்களான த்ருவன், தந்வந்த்ரி, ப்ருது, வாஸுகி, முதலியவர்களையும், அவைகளில் பரமாத்மா அந்தர்யாமியாய் வ்யாபித்திருப்பதையும், ஒன்றைக்காட்டிலுமொன்று பத்துமடங்கு அதிகமாய் அண்டத்தைச் சூழ்ந்திருக்கிற ப்ருதிவீ, ஜலம், தேஜஸ்ஸு, வாயு, ஆகாசம், அஹங்காரம், மஹத், என்கிற ஏழு தத்வங்களையும், அண்டத்திலுள்ள பசு பக்ஷி முதலிய ஜங்கமங்களையும், மரம் கொடி புல் முதலிய ஸ்தாவரங்களையும், மூலப்ரக்ருதியையும், அதிலுள்ள ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்கிற மூன்று குணங்களையும், அம்மூலப்ரக்ருதியிலழுந்தியிருக்கிற ஜீவன்களையும் த்யாநிக்கக்கடவன்.

நித்யவிபூதியை த்யாநிக்கும் விதம்.

తమస స్తత్పరం శుద్ధం హిరణ్మయ మనామయమ్ ।
పరమం వైష్ణవం లోకం నిత్యానన్దసుఖావహమ్॥ ౧౫.

தமஸஸ்தத்பரம்சுத்தம்ஹிரண்மயமநாமயம்|
பரமம்வைஷ்ணவம்லோகம்நித்யாநந்தஸுகாவஹம்|| க௫.

தா-ம்.—மூலப்ரக்ருதிக்குமேல் சுத்தஸத்வமயமாய் ஸுவர்ணம் போல் ப்ரகாசித்துக்கொண்டு மிகவழகியதாய் ப்ரளயம் முதலிய உபத்ரவங்களின்றி ஸர்வோத்க்ருஷ்டமாய் எப்போதும் ஆநந்தத்தை விளைக்குமதான ஸ்ரீவைகுண்டமென்கிற ஸ்ரீவைஷ்ணவலோகத்தை த்யாநிக்கக்கடவன்.

తత్రసంవాహినీం దివ్యాం విరజాం వేదసంభవామ్।
తత్ర శుద్ధం పరం వ్యోమ హ్యానన్త మమృతాహ్వయమ్॥ ౧౬.

నిర్మలం నిత్య మజడ మనన్తసుఖదం సుఖమ్।
తత్రస్థితా న్యనేకాని స్థానాని సుఖవన్తిచ॥ ౧౭.

తత్ర జానపదగ్రామనగరాణిమహా న్త్యపి।
సర్వే హిరణ్మయా స్తత్ర సర్వే వేదమయా శ్శుభాః। ౧౮.

అప్రాకృతతయా నిత్యాః పునరావృత్తివర్జితాః।

தத்ரஸம்வாஹினீம்திவ்யாம்விரஜாம்வேதஸம்பவாம்|
தத்ரசுத்தம்பரம்வ்யோமஹ்யநந்தமம்ருதாஹ்வயம்|| க௬.

நிர்மலம்நித்யமஜடமநந்தஸுகதம்ஸுகம்|
தத்ரஸ்திதாந்யநேகாநிஸ்தாநாநிஸுகவந்திச|| க௭

தத்ரஜாநபதக்ராமநகராணிமஹாந்த்யபி|
ஸர்வேஹிரண்மயாஸ்தத்ரஸர்வேவேதமயாஶ்ஶுபா꞉|| க௮.

அப்ராக்ருததயாநித்யா꞉புநராவ்ருத்திவர்ஜிதா꞉|

தா-ம்.—மூலப்ரக்ருதிக்கப்பால் வேதபர்வதத்தில் நின்றுமுண்டாய்ப்பெருகுகிற விரஜை என்றுபெயரையுடைய ஶ்ரேஷ்டமான நதியை த்யாநிக்கக்கடவன். அதற்குமேல் தேஜோமயமாய், அளவில்லாமல் பரந்து மோக்ஷமென்று சொல்லப்படுகிற பரமாகாசமுண்டு. அதற்கு உத்பத்தி விநாசங்கள் முதலிய தோஷங்கள் கிடையாது. ஸ்வயம்ப்ரகாசமாய், அங்குள்ளவர்களுக்கு அபரிமிதமான ஸுகத்தையுண்டுபண்ணுகிறதாய் அத்யந்த மநுகூலமாயிருக்கும். அங்கு அநேகமான இடங்கள் ஸுகஜநகங்களாய் இருக்கின்றன, அங்கு தேசங்க

ளும் ஊர்களும் பெரிய பட்டணங்களு மிருக்கின்றன. அங்குள்ள புருஷர்கள் எல்லாரும் ஸுவர்ணம்போல் ஸௌந்தர்யமுடையவர்களாய், எப்போதும் வேதாத்யயநம் பண்ணிக்கொண்டு சாந்தமூர்த்திகளாய்; ப்ரக்ருதிஸம்பந்த மடியாகவந்த ஜநநமரண சூந்யராய்; இஸ்ஸம்ஸாரத்தில் திரும்பி வராமல் அங்கே யிருந்து பகவதநுபவம் பண்ணிக்கொண் டிருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் த்யாகிக்கக் கடவன். ௧௮௨.

తన్మధ్యే నగరం దివ్యం వైకుంఠంనామ నామతః॥ ౧౯.

చన్ద్రకాన్తమయై ర్నిత్యై ర్విమానై ర్బహుభి ర్వృతమ్।
సర్వవర్ణమయై స్సౌధై ర్నానారత్నైశ్చ శోభితమ్॥ ౨౦.

దివ్యరత్నమయై శ్శుభ్రైః ప్రాకారై ర్గోపురై ర్యుతమ్।
నానామణిమయై ర్దీప్రగృహపఙ్క్తిభి రావృతమ్॥ ౨౧.

శక్రచాపౌఘసఙ్కాశైః ప్రాగ్రైస్సౌధైస్సముచ్ఛ్రితమ్।
వివస్వత్కోటిసఙ్కాశై స్తోరణై రుపశోభితమ్॥ ౨౨.

సుధాకరసహస్రాభైః పురుషై రుపశోభితమ్।
సర్వేచతుర్భుజా శ్శుద్ధా స్సర్వేశ సమవిగ్రహాః॥ ౨౩.

శఙ్ఖచక్రధరా స్సర్వే స్రగ్విణః పీతవాససః!
అనురజ్యన్తి దేవేశంభక్త్యా భృత్యారసేన వై॥ ౨౪.

ప్రాతరుద్యత్సహస్రాంశుకోటీశతసమప్రభాః।
సర్వే లక్షణసంపన్నాః పద్మహస్తాశ్చతుర్భుజాః॥ ౨౫

అనిశంభక్తిభిశ్శ్రీశ మర్చయన్తిచ కేశవమ్।
ఆరూఢయానా స్సర్వే నార్యశ్చ పురుషా స్తథా॥ ౨౬.

தந்மத்யேநகரம்திவ்யம்வைகுண்டம்நாமநாமத:|| ௧௯.

சந்த்ரகாந்தமயைர்நித்யைர்விமாநைர்பஹுபிர்வ்ருதம்|
ஸர்வவர்ணமயைஸ்ஸௌதைர்நாநாரத்நைஶ்சஶோபிதம்|| ௨௦.

திவ்யரத்நமயைஶ்ஶுப்ரை: ப்ராகாரைர்கோபுரைர்யுதம்|
நாநாமணிமயைர்தீப்ரக்ருஹபங்க்திபிராவ்ருதம்|| ௨௧.

சக்ரசாபௌகஸங்காசை:ப்ராக்ரைஸ்ஸௌதைஸ்ஸமுச்ச்ரிதம்।
விவஸ்வத்கோடிஸங்காசை ஸ்தோரணைருபசோபிதம்॥ ௨௨

ஸூதாகரஸஹஸ்ராபை: புருஷைருபசோபிதம்।
ஸர்வேசதுர் புஜாஸ்ஸூக்ஷ்மாஸ்ஸ்வாத்மேச ஸமவிக்ரஹா:।
சங்கசக்ரதராஸ்ஸர்வே ஸ்ரக்விண: பீதவாஸஸ:॥ ௨௩

அநுரஞ்ஜயந்திதேவேசம் பக்த்யாப்ருத்யரஸேநவை।
ப்ராதருத்யத்ஸஹஸ்ராம்சுகோடிசதஸமப்ரபா:॥ ௨௪

ஸர்வேலக்ஷண ஸம்பந்நா: பத்மஹஸ்தாஸ்சதுர்புஜா:।
அநிசம்பக்திபிஸ்ஸ்ரீச மர்ச்சயந்திசகேசவம்॥ ௨௫

ஆரூடயௌவநாஸ்ஸர்வே நார்யஸ்சபுருஷாஸ்ததா।
மோதந்தேபரமேவ்யோம்நி சாச்வதேப்ரபுகிங்கரா:॥ ௨௬.

தா-ம்.—அந்ததேசத்தில் ஸ்ரீவைகுண்டமென்று ஒரு பட்டணமுண்டு. அங்கு சந்த்ரகாந்த மணிகளிழைத்த விமானங்களும், உயர்ந்த ரத்நங்களினால் கட்டப்பட்ட கோபுரங்களும் ப்ராகாரங்களும், பலவிதமான மணிகளிழைத்து விசித்திரமாய் அநேகமான இந்த்ர தநுஸ்ஸுக்கள் கூடினாற்போலிருக்கிற உப்பரிகைகளும், ஒரேகாலத்தில் கோடி ஸூர்யர்களுதித்தாற்போல் விளங்காநின்ற கோபுரதுவாரங்களும் சூழ்ந்துவிளங்குகின்றன. அங்குள்ள புருஷர்களெல்லாம் அநேக சந்த்ரனோடொத்த காந்தியுடையவர்களாய், பரமாத்மாவைப்போல் நாலு திருக்கைகளையுடையவர்களாய், சங்கம் சக்ரம் வநமாலை பீதாம்பரங்களையணிந்தவர்களாய், பக்தியுடன் கைங்கர்யம் செய்து பரமாத்மாவை ஆநந்திப்பிக்கிறார்கள். அங்குள்ள ஸ்த்ரீகளும் அப்போதுஉதயமான அநேகங்கோடி ஸூர்யர்கள்போன்ற காந்தியயுடையவர்களாய், ஸர்வலக்ஷணங்களையுமுடையவர்களாய், தாமரைப்பூக்களை நான்கு திருக்கைகளிலுடையவர்களாய், ஸ்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணனை அத்யந்த பக்தியுக்தராய் ஆராதிக்கிறார்கள். ஸ்த்ரீகளும் புருஷர்களும் எப்போதும் யௌவநத்தையுடையவர்களாய்த் தங்கள் ஸ்வாமியான பரமாத்மாவுக்குக் கைங்கர்யத்தைச்செய்து கொண்டு ஆநந்தித்திருக்கிறார்கள். ௨௬ ஓ:

మోదన్తే పరమే వ్యోమ్ని శాశ్వతే ప్రభుకిఙ్కరాః।
తన్మధ్యే మన్దిరం దివ్యం ప్రాసాద శతసఙ్కులమ్ ॥ ౨౭.

మణిప్రాకార సంశోభి చతుర్ద్వార సమన్వితమ్ ।
చణ్డాది ద్వారపాలైశ్చ కుముదాద్యైశ్చ రక్షితమ్॥ ౨౮.
నానా రత్నమయైర్దివ్యై ర్గృహముఖ్యై స్సుశోభితమ్।

தந்மத்யேமந்திரந்திவ்யம் ப்ராஸாதசதஸங்குலம்|
மணிப்ராகாரஸம்சோபி சதுர்த்வாரஸமந்விதம்|| உஎ.

சண்டாதித்வாரபாலைஶ்ச குமுதாத்யைஶ்ச ரக்ஷிதம்,
நாநாரத்நமயைர்திவ்யைர் க்ருஹமுக்யைஸ்ஸுசோபிதம். உஅ.

தா-ம்.—அந்த ஸ்ரீ வைகுண்டமென்கிற திவ்யநகரத்தின் மத்தியில் அநேக மண்டபங்கள், ரத்நங்களிழைத்தப்ராகாரங்கள் இவைகளோடுகூடியதாய், நாலுகோபுரத்வாரங்களையுடைய கோயிலிருக்கிறது. அந்தக்கோயிலே + சண்டன் முதலிய த்வாரபாலர்களும் ‡ குமுதன் முதலியவர்களும் ரக்ஷிக்கிறார்கள். அதின் நடுவில் அநேகவிதமானரத்நங்களிழைத்த மாளிகைகள் இருக்கின்றன. உஅ ஒ.

మధ్యే మణిమయం దివ్యం సహస్రస్తమ్భసంయుతమ్॥ ౨౯.
నానారత్నవితానాఢ్యై శ్చిత్రితం సుసుఖాస్పదమ్ ।
దివ్య చన్దన కర్పూరైః కుఙ్కుమాద్యై స్సుశోభితమ్ ॥ ౩౦॥
దివ్యా ప్సరోగణై ర్నిత్యై స్సేవితం సతతంశుభైః ।

மத்யேமணிமயந்திவ்யம் ஸஹஸ்ரஸ்தம்பஸம்யுதம்|
நாநாரத்நவிதாநௌகை ஶ்சித்ரிதம்ஸுஸுகாஸ்பதம்|| உகூ.
திவ்யசந்தநகர்பூரை: குங்குமாத்யைஸ்ஸுசோபிதம்|
திவ்யாப்ஸரோகணைர்நித்யை ஸ்ஸேவிதம்ஸததம்சுபை:|| உ௦.

தா-ம்.—அந்தமாளிகைகளின் மத்தியில் ரத்நங்களினால் கட்டப்பட்டு ஆஶ்சர்யகரமாய், ஆயிரங்கால்களையுடையதாய், அநேகவிதமான மணிகளினால் செய்யப்பட்ட மேற்கட்டுகளினால் விசித்ரமாய், மிகவு மாநந்தஜநகமான மண்டபமிருக்கிறது. அது ஶ்ரேஷ்டமான சந்தனம் பச்சைக்கற்பூரம் குங்குமப்பூ முதலிய வாஸனைத்ரவ்யங்களினால் பரிமளித்துக்கொண்டிருக்கிறது. அங்கு ஸர்வாலங்காரபூஷிதைகளாய் அழகான அப்ஸரஸ்த்ரீகள் எப்போதும் வாஸம்பண்ணுகிறார்கள். ௩௦ ஒ.

+ சண்டன், ப்ரசண்டன், பத்ரன், ஸுபத்ரன், ஜயன், விஜயன், தாதா, விதாதா, இவர்களெண்மரும் த்வாரபாலர்கள்.

‡ குமுதன், குமுதாக்ஷன், புண்டரீகன், வாமநன் சங்குகர்ணன், ஸர்வநேத்ரன், ஸுமுகன், ஸுப்ரதிஷ்டன், இவர்கள் கணாதிபர்கள்.

మధ్యే సింహాసనం దివ్యం ధర్మాద్యైస్సూరిభిర్వృతమ్॥ 3౧.
వేదత్రయమయం దివ్యం సాఙ్గోపాఙ్గపరిచ్ఛదమ్।
తన్మధ్యేఽష్టదళం పద్మమష్టాక్షరమయం పరమ్॥ 3౨.
అకారః కర్ణికా తత్ర స్వరవ్యఞ్జనసంయుతః।

மத்யேஸிம்ஹாஸநம்திவ்யம் தர்மாத்யைஸ்ஸூரிபிர்வ்ருதம்|
வேதத்ரயமயம்திவ்யம் ஸாங்கோபாங்கபரிச்சதம்|| ௩௧.
தந்மத்யேஷ்டதளம்பத்ம மஷ்டாக்ஷரமயம்பரம்|
அகாரஃகர்ணிகாதத்ர ஸ்வரவ்யஞ்ஜநஸம்யுதஃ|| ௩௨.

தா-ம்.—அந்தமண்டபத்தின் மத்தியில் மூன்று வேதஸ்வரூபமாய், ஸமஸ்தாவயவங்களினாலும் ஸமஸ்தாலங்காரங்களினாலும் பரிபூர்ணமாய், * தர்மம் முதலிய நித்யஸூரிகளினால் சூழப்பட்ட அத்புதமான ஸிம்ஹாஸநமிருக்கிறது. அதின் நடுவில் ஸ்ரீமதஷ்டாக்ஷரஸ்வரூபமாய் ஸர்வோத்க்ருஷ்டமாய் எட்டு இதழ்களையுடைய கமலமிருக்கிறது. அதின் நடுவில் அச்சு ஹல்லு இந்த அக்ஷரங்களாகிறதாதுகளோடுகூடிய அகாரஸ்வரூபமான கர்ணிகை யிருக்கிறது. ௩௨ ௯.

తస్మిన్ననన్తపర్యఙ్కే ఫణారత్నవిచిత్రితే॥ 33.
ధ్యాయేన్నివిష్టమాత్మేశమీశ్వర్యా జగతశ్శ్రియా।
ఇన్దీవరదళశ్యామం పద్మపత్రనిభేక్షణమ్॥ 3౪॥
శ్లక్ష్ణనాసం లసద్గణ్డం సుభ్రూవల్లీయుగాన్వితమ్।
ప్రాతరుద్యత్సహస్రాంశుప్రాయకుణ్డలశోభితమ్॥ 3౫.
సంపూర్ణచన్ద్రప్రతిమస్మితయుక్తశుభాననమ్।
మహాహనుం ప్రోన్నతాంసం దీర్ఘబాహుచతుష్టయమ్॥ 3౬.
మహోరస్కం స్నిగ్ధవర్ణం కోమలావయవోజ్జ్వలమ్।
సుస్నిగ్ధనీలకేశాన్తమన్తరాకబరీకృతమ్॥ 3౭.
శఙ్ఖచక్రగదాఖడ్గశార్ఙ్గాద్యైరాయుధైర్యుతమ్।
అర్కబిమ్బసహస్రాభకిరీటేన విరాజితమ్॥ 3౮.

* தர்மம், ஜ்ஞாநம், வைராக்யம், ஐஸ்வர்யம், அதர்மம், அஜ்ஞாநம், அவைராக்யம், அநைஸ்வர்யம், இந்த எண்மரும் திவ்யஸிம்ஹாஸநத்தின் கால்கள்.

దివ్యచన్దనలిప్తాఙ్గం పీతవస్త్రం శుభాహ్వయమ్ ॥
యువాకుమారం దివ్యాఙ్గం శుద్ధసత్త్వమనోహరమ్ ॥ ౩౯.

కౌస్తుభోద్భాసితోరస్కం వనమాలావిభూషితమ్ ।
కేయూరహారకటకనూపురాద్యైరలఙ్కృతమ్ ॥ ౪౦.

స్నిగ్ధరక్తారవిన్దాభపాదహస్తామ్బుజాన్వితమ్ ।
కన్దర్పకోటిలావణ్య జగన్మోహనవిగ్రహమ్ ॥ ౪౧.

సమానోత్కృష్టరహితం రూపౌదార్యగుణాదిభిః ।
ప్రాతరుద్యత్సహస్రాంశు సదృశా స్వేనతేజసా ॥ ౪౨.

తస్యైవ సదృశీదేవీ శీలరూపగుణాదిభిః ।
సర్వలక్షణసంపన్నా సర్వాభరణభూషితా । ౪౩.
సుధాబ్ధిఫేనసఙ్కాశ దివ్యవస్త్రేణ శోభితా ॥
సుస్నిగ్ధనీలకుటిలకేశభారైస్సుశోభితా ॥ ౪౪.

చతుర్భుజైర్విరాజన్తీ కేయూరాఙ్గదభూషణైః ।
హేమపద్మం మాతులుఙ్గముద్వహన్తీ కరద్వయే ॥ ౪౫.

ఇతరాభ్యాం వహన్తీసా భర్తుఃపాదామ్బుజద్వయమ్ ।
ఏవంభూమిశ్చ నీళాచ పార్శ్వయోస్సముపస్థితే ॥ ౪౬.

గృహీతచామరా దివ్యాశ్శక్తయోఽష్టదళేషుచ ।
విమలోత్కర్షిణీ జ్ఞానా క్రియా యోగా తథైవచ ॥ ౪౭.

ప్రహ్వీ సత్యా తథేశానా మహిష్యస్సముపస్థితాః ।
ఏవంవైకుణ్ఠనాథోఽసౌ రాజతే పరమేపదే ॥ ౪౮

సేవ్యమానస్సదానిత్యైర్ముక్తైర్భోగపరాయణైః ।
ఏవం విచిన్తయేన్నిత్యం పరే వ్యోమ్ని మహేశ్వరమ్ ॥ ౪౯.

தஸ்மிந்நந்தபர்யங்கே பத்ராத்ரவிசித்ரிதே || ௫௫.
தயா யேந்நிவிஷ்டமாத்மேச ஸ்ரீஸ்வர்யா ஜகதாம்பரியா |

இந்தீவரதளஶ்யாமம் பத்மபத்ரநிபேக்ஷணம்|| ௩௪.

ஶ்லக்ஷ்ணநாஸம் லஸத்கண்ட ஸுப்ருவல்லியுகாந்விதம்|
ப்ராதருத்யத்ஸஹஸ்ராம்சு ப்ராயகுண்டலசோபிதம்|| ௩௫.
ஸம்பூர்ணசந்த்ரப்ரதிம ஸ்மிதயுக்தசுபாநநம்|
மஹாஹநும் ப்ரோந்நதாம்ஸம் தீர்க்கபாஹுசதுஷ்டயம்|| ௩௬.

மஹோரஸ்கம் ஸ்நிக்தவர்ணம் கோமலாவயவோஜ்வலம்|
ஸுஸ்நிக்தநீலகேசாந்த மந்தராகபரீக்ருதம்|| ௩௭.

சங்கசக்ரகதாகட்க சார்ங்காத்யைராயுதைர்யுதம்|
அர்க்கபிம்பஸஹஸ்ராப கிரீடேநவிராஜிதம்|| ௩௮.

திவ்யசந்தநலிப்தாங்கம் பீதவஸ்த்ரம் சுபாஹ்வயம்|
யுவாகுமாரம் திவ்யாங்கம் சுத்தஸத்வமநோஹரம்|| ௩௯.
கௌஸ்துபோத்பாஸிதோரஸ்கம் வநமாலாவிபூஷிதம்|
கேயூரஹாரகடக நூபுராத்யைரலங்க்ருதம்|| ௪௰.

ஸ்நிக்தரக்தாரவிந்தாப பாதஹஸ்தாம்புஜாந்விதம்|
கந்தர்பகோடிலாவண்ய ஜகந்மோஹநவிக்ரஹம்|| ௪௧.

ஸமாநோத்க்ருஷ்டராஹிதம் ரூபௌதார்யகுணாதிபி: |
ப்ராதருத்யத்ஸஹஸ்ராம்சு ஸத்ருசாஸ்வேநதேஜஸா|| ௪௨.

தஸ்யைவஸத்ருசீதேவீ சீலரூபகுணாதிபி:|
ஸர்வலக்ஷணஸம்பந்நா ஸர்வாபரணபூஷிதா|| ௪௩.

ஸுதாப்திபேநஸங்காச திவ்யவஸ்த்ரேணசோபிதா|
ஸுஸ்நிக்தநீலகுடில கேசபாசைஸ்ஸுசோபிதா|| ௪௪.

சதுர்புஜைர்விராஜந்தீ கேயூராங்கதபூஷணை:|
ஹேமபத்மம் மாதுலுங்க முத்வஹந்தீகரத்வயே|| ௪௫.

இதராப்யாம் வஹந்தீஸா பர்த்து: பாதாம்புஜத்வயம்|
ஏவம்பூமிஶ்சநீளாச பார்ச்வயோஸ்ஸமுபஸ்திதே|| ௪௬.

க்ருஹீதசாமராதிவ்யாஶ் ஶக்தயோஷ்டதளேஷுச|
விமலோத்கர்ஷிணீ ஜ்ஞாநா க்ரியாயோகாததைவச|| ௪௭.

ப்ரஹ்வீஸத்யாததேசாநா மஹிஷ்யஸ்ஸமுபஸ்திதா:|
ஏவம் வைகுண்டநாதோ ஸௌ ராஜதே பரமேபதே|| ௪௮.

ஸேவ்யமாநஸ்ஸதா நித்யைர் முக்தைர்போகபராயணை:|
ஏவம் விசிந்தயேந்நித்யம் பரேவ்யோம்நி மஹேஸ்வரம்॥ சகூ.

தா-ம்.—அந்தக்கர்ணிகையின் மத்தியில் திருவநந்தாழ்வான் தன் படங்களிலுள்ள மணிகளின் காந்தியினால் விசித்ரமான அழகை யுடையவராய் எழுந்தருளியிருக்கிறார். அந்தத் திருவநந்தாழ்வானாகி ற படுக்கையின்மேல் தனக்குப்பத்நியான ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன்கூட எழுந்தருளியிருக்கிறஜகதீஸ்வரனை, ஸ்ரீமந்நாராயணனை த்யாநம் செய்யக்கடவன். அந்த ஸர்வேஸ்வரன் தாமரைப்பூவினிதழ்போல் நீண்டழகிய திருக்கண்களையும், அழகிய நீண்டமூக்கையும், அழகிய கபோலத்தையும், கொடிபோன்ற புருவத்தையும், பூர்ணசந்த்ரன் போல் வெளுத்த புன்சிரிப்பையுடைய திருமுகமண்டலத்தையும், நீண்டு பருத்திருக்கிற தாடையையும், உயர்ந்த தோள்களையும், நீண்டநான்கு திருக்கைகளையும், விசாலமாய் உயர்ந்திருக்கிற திரு மார்பையும், ம்ருதுவான மற்ற அவயவங்களையுமுடையவராய், ம்ருது வாய் கறுத்து உள்ளே சொருகப்பட்டிருக்கிற மயிர் முடியையுடைய வராய், சங்கம், சக்ரம், கதை, கத்தி, தநுஸ்ஸு, இவைமுதலிய ஆயு தங்களையும், ஆயிரம் பாலஸூர்யர்களுக்கு ஸமாநமான காந்தியை யுடைய குண்டலம், ஆயிரம் ஸூர்யர்களோடொத்த கிரீடம், பீதாம் பரம், கௌஸ்துபமணி, வநமாலை, தோள்வளை, முத்துமாலை, தோ டா, அரைநூல்மாலை, இவைமுதலிய திருவாபரணங்களையுமணிந்து, உத்தமமான சந்தநத்தினால் பரிமளித்துக்கொண்டு யௌவநாவஸ் தையையும் கௌமாராவஸ்தையையு முடையதாய், சுத்தஸத்வமய மாய் அத்புதமாய் அழகாய் கரிநெய்தலினிதழ்போல் ஸ்யாமமாய், கோடிமந்மதன்போன்ற லாவண்யத்தையுடையதாய் ஜகத்தைமோ ஹிப்பியாநின்ற திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவராய் எழுந்தரு ளியிருக்கிறார். ஸௌந்தர்யம், ஔதார்யம் முதலான குணங்களில் இவருக்கொத்தாரும் மிக்காருமில்லை; இவர் அபரிமிதமான குணங்க ளையும், பாலஸூர்யன்போன்ற தேஜஸ்ஸையுமுடையவர். ஸ்ரீமஹால க்ஷ்மியும், ஸௌந்தர்யத்தினாலும் மற்றகுணங்களினாலும் ஸ்ரீமந்நாரா யணனோடொத்தவளாய், ஸமஸ்த கல்யாணகுணபரிபூர்ணையாய், ஸம ஸ்தமான ஆபரணங்களையும், திருப்பாற்கடல்நுரைபோல் வெளுத்து ஸ்ரேஷ்டமாயிருக்கிற திருப்பரியட்டத்தையுமணிந்து, கறுத்து சுரு ண்டு அழகியதாயிருக்கிற மயிர்களினாலும், தோள்வளை பாஜீமுத லிய பூஷணங்களணிந்த நான்கு திருக்கைகளினாலும் ஸ்ரேஷ்டமான

சோலையையுடையவளாய். ஒரு திருக்கையில் ஸுவர்ணமயமான த்ாமரஸ புஷ்பத்தையும்,மற்றொருதிருக்கையில் வில்வத்தையும்தரித்து, மற்ற இரண்டுதிருக்கைகளினால்தன்பதியானஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டு அவருடன்கூட அந்தத் திருவநந்தாழ்வான் மேலே எழுந்தருளியிருக்கிறாள். இவ்விதமாகவே பூமிதேவியும் நீளாதேவியும் எம்பெருமானுடைய இரண்டு பக்கங்களிலுமெழுந்தருளியிருக்கிறார்கள். மற்றமஹிஷிகளும் பக்கங்களிலெழுந்தருளியிருக்கிறார்கள். ஆஸநகமலத்தில் எட்டு இதழ்களிலும் விமலை, உத்கர்ஷிணி, ஜ்ஞானை, க்ரியை, யோகை, ப்ரஹ்வி, ஸத்யை, என்ற எட்டு சக்திகள் நின்று சாமரம் வீசுகின்றார்கள். நித்யரும் முக்தரும் பரமாநந்த யுக்தராய் எப்போதும் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்கிறார்கள். இவர்களையெல்லாம் இவ்விதமாகவே த்யானம் செய்யக்கடவன். ௪௯.

తస్యైవ వ్యూహభేదాశ్చ విభవార్చాదిమూర్తయః ।
హిరణ్మయాభ్యాం హస్తాభ్యాం శుద్ధాభ్యాం ప్రవిరాజితాః॥౫౦.

தஸ்யைவவ்யூஹபேதாஸ்ச விபவார்ச் சாதிமூர்த்தய:|
ஹிரண்மயாப்யாம் ஹஸ்தாப்யாம் சுத்தாப்யாம் ப்ரவிராஜிதா:॥௫௦.

தா-ம்.—அந்தப்பரவாஸுதேவனுடைய (அநிருத்தன் கேசவன் முதலிய) வ்யூஹாவதாரங்களும், (பரசுராமன் முதலிய) ஆவேசாவதாரங்களும், (மத்ஸ்யம், கூர்மம் முதலிய) விபவாவதாரங்களும், (அழகிய மணவாளன்முதலிய) அர்ச்சாவதாரங்களும் ஸுவர்ணம் போலழகியதாய் நிர்மலமாயிருக்கிற இரண்டு திருக்கைகளையுடையவர்களாய் அந்தலோகத்தில் எழுந்தருளியிருக்கிறார்கள்.

శఙ్ఖచక్రగదాఖడ్గశార్ఙ్గలాఙ్గలముద్గరాః।
పరితః పురుషాకారా రక్షన్తి హరిమన్దిరమ్॥		౫౧.

சங்கசக்ரகதா கட்க சார்ங்கலாங்கல முத்கரா:|
பரித: புருஷாகாரா ரக்ஷந்திஹரி மந்திரம்||		௫௧.

தா-ம்.—சங்கம்,சக்ரம்,கதை,கட்கம்,(கத்தி)சார்ங்கம்'(தநுஸ்ஸு), கலப்பை, உலக்கை, இந்த ஆயுதங்கள் புருஷஸ்வரூபத்தை யெடுத்துக்கொண்டு பகவந் மந்திரத்தைச் சுற்றும் ரக்ஷிக்கிறார்கள்.

வ்யூஹம் முதலிய அவதாரங்கள் எழுந்தருளியிருக்கும் ஸ்தாநம்.

తస్య వైకుణ్ఠనాథస్య ప్రాచ్యాం శుభతరో విభోః ।
వాసుదేవస్య విమలో లోకో వైశ్వానరప్రభః ॥ ౫౨.

தஸ்ய வைகுண்ட நாதஸ்ய ப்ராச்யாம் சுபதரோவிபோ:।
வாஸுதேவஸ்யவிமலோ லோகோவைச்வாநரப்ரப:॥ ௫௨.

தா-ம்.—அந்த ஸ்ரீ வைகுண்டநாதனுடைய கோயிலுக்குக்கிழக்குத்திக்கில் மங்களகரமாய், சுத்தஸத்வமயமாய், அக்நிபோல் காந்தியையுடைத்தான வாஸுதேவனுடைய கோயில் இருக்கிறது. ௫௨.

దక్షిణే తస్య విమలో దివ్యస్సఙ్కర్షణాలయః ।
పశ్చిమే తస్య పూజ్యన్తు శుభం ప్రద్యుమ్నమన్దిరమ్ ॥ ౫౩.

தக்ஷிணே தஸ்யவிமலோ திவ்யஸ்ஸங்கர்ஷணாலய:।
பஶ்சிமே தஸ்யபூஜ்யந்து சுபம்ப்ரத்யும்நமந்திரம்॥ ௫௩.

தா-ம்.—ஸ்ரீ வைகுண்டநாதன் கோயிலுக்குத்தெற்குத்திக்கில் சுத்தஸத்வமயமாய்ஆஶ்சர்யகரமான ஸங்கர்ஷணன்கோயில் இருக்கிறது. மேற்குதிக்கில் சுபகரமாய் கொண்டாடத்தகுந்ததான ப்ரத்யும்நன் கோயில் இருக்கிறது. ௫௩.

ఉదీచ్యామనిరుద్ధస్య లోకః కోటీన్దుసన్నిభః ।
ఈశాన్యాం కాన్తినిలయ ఆగ్నేయ్యాం లక్ష్మీమన్దిరమ్ ॥ ౫౪.

உதீச்யாமநிருத்தஸ்ய லோக: கோடீந்து ஸந்நிப:।
ஈசாந்யாம் காந்திநிலய ஆக்நேய்யாம் லக்ஷ்மிமந்திரம்॥ ௫௪.

தா-ம்.—ஸ்ரீவைகுண்டநாதன் கோயிலுக்கு வடக்குதிக்கில் கோடிசந்த்ரனையொத்த காந்தியையுடையதான அநிருத்தன்கோயிலும், ஈசாந்ய (வடகிழக்கு) மூலையில் (அநிருத்தனுடைய பத்நியான) காந்திதேவியின்கோயிலும், அக்நி (தென்கிழக்கு) மூலையில் (வாஸுதேவனுடைய பத்நியான) லக்ஷ்மீதேவியின் கோயிலும் இருக்கின்றன. ௫௪.

సారస్వతన్తు నైరృత్యాం వాయవ్యాం రతిమన్దిరమ్ ।
ఇదమావరణం తస్య ప్రథమం పరమస్య వై ॥ ౫౫.

ஸாரஸ்வதந்து நைர்ருத்யாம் வாயவ்யாம்ரதிமந்திரம்।
இதமாவரணம்தஸ்ய ப்ரதமம்பரமஸ்யவை॥ ௫௫.

தா-ம்.—நைர்ருதி (தென்மேற்கு) மூலையில் (ஸங்கர்ஷணனுடையபத்நியான) ஸரஸ்வதிதேவியின் கோயிலும், வாயு (வடமேற்கு) மூலையில் (ப்ரத்யும்நனுடைய பத்நியான) ரதிதேவியின் கோயிலும் இருக்கின்றன. இவைகள் ஸ்ரீ வைகுண்டநாதன் கோயிலின் முதல்ப்ராகாரத்திலிருக்கின்றன. ௫௫.

ద్వితీయావరణం తస్య వైకుణ్ఠస్య శుభోన్నతమ్।
అనన్తసత్యధామాఖ్య విష్వక్సేన గజాననాః॥ ౫౬.
శఙ్ఖపద్మనిధీతార్క్ష్యో లోకా నిత్యం సుఖప్రదాః।

த்விதீயாவரணம்தஸ்ய வைகுண்டஸ்யசுபோந்நதம்|
அநந்தஸத்யதாமாக்ய விஷ்வக்ஸேநகஜாநநா:॥ ௫௬.
சங்கபத்மநிதீதார்க்ஷ்யோ லோகாநித்யம்ஸுகப்ரதா:|

தா-ம்.—ஸ்ரீ வைகுண்டநாதன் கோயிலின் மங்களகரமான இரண்டாவது ப்ராகாரத்தில் அநந்தன், ஸத்யதாமன், விஷ்வக்ஸேநர், கஜாநநன்; சங்கநிதி, பத்மநிதி, கருத்மான், இவர்களுடைய ஸுககரங்களான கோயில்களிருக்கின்றன. ௫௬அ.

తృతీయావరణం తస్య కేశవాదిమమూర్తిభిః। ౫౭.

த்ருதீயாவரணம்தஸ்ய கேசவாதிமமூர்த்திபி:| ௫௭.

தா-ம்—ஸ்ரீ வைகுண்டநாதன் கோயிலின் மூன்றாவது ப்ராகாரத்தில் கேசவன் முதல் தாமோதரனளவான பன்னிரண்டு திருநாமங்களின் கோயில்களிருக்கின்றன. ௫௭.

అధిష్ఠితా దివ్యలోకాస్తత స్సఙ్కర్షణాదిభిః।

அதிஷ்டிதாதிவ்யலோகா ஸ்ததஸ்ஸங்கர்ஷணாதிபி:|

தா-ம்—ஸ்ரீ வைகுண்டநாதன் கோயிலின் நான்காவது ப்ராகாரத்தில் முதல்ப்ராகாரத்திற்சொன்ன ஸங்கர்ஷணன் முதலியவர்களின் கோயில்களிருக்கின்றன. ௫௭அ

మత్స్యః కూర్మో వరాహశ్చ నారసింహోఽథ వామనః। ౫౮

జామదగ్న్యో దాశరథిః కృష్ణశ్చైవ సురేశ్వరః।
దధిభక్తో హయగ్రీవః పఞ్చమావరణే స్థితాః॥ ౫౯.

అధిష్ఠితా దివ్యలోకా స్సతతం విభవైశ్చతైః ।

மத்ஸ்ய꞉கூர்மோவராஹஸ்ச நாரஸிம்ஹோதவாமந꞉॥ ௫அ.
ஜாமதக்ந்யோதாசரதி꞉க்ருஷ்ணஸ்சைவவஸுதேவ꞉ஸ்வர꞉।

ததிபக்தோஹயக்ரீவ꞉ பஞ்சமாவரணேஸ்திதா꞉॥ ௫கூ·
அதிஷ்டிதாதிவ்யலோகா ஸ்ஸததம்விபவைஸ்சதை꞉।

தா-ம்.—மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நாரஸிம்ஹன், வாமநன், பரசுராமன், ஸ்ரீராமன், தேவாதிதேவனுனக்ருஷ்ணன், ததிபக்தன், ஹயக்ரீவன்; இந்த அவதாரங்களுடையகோயில்கள் ஸ்ரீவைகுண்டநாதனுடையகோயிலின் ஐந்தாவதுப்ராகாரத்திலிருக்கின்றன. ௫கூஉ.

ఏవమావరణాః పంచ నిత్యాస్తస్య పరస్యహి॥ ౬౦.

సర్వేదేవగణాః పంచ నిత్యాస్తస్య పరస్యహి ।

ஏவமாவரணா꞉பஞ்சநித்யாஸ்தஸ்யபரஸ்யஹி॥ சா०·
ஸர்வேதேவகணா꞉பஞ்சநித்யாஸ்தஸ்யபரஸ்யஹி।

தா-ம்.—இவ்விதமாய் ஐந்து ப்ராகாரங்களும், அங்கங்குள்ள ஐந்துவிதமான தேவர்களின் ஸமூஹங்களும் ஸ்ரீவைகுண்டநாதன்கோயிலில் எப்போதும் இருக்கின்றன. சா०உ.

సర్వేదేవా గణాస్తుల్యా వైకుంఠస్యావనోత్సుకాః॥ ౬౧.

శుద్ధసత్వమయాస్సర్వే నిత్యానన్తసుఖప్రదాః ।

అప్రాకృతాశ్శాశ్వతాశ్చ విష్ణుకైంకర్యవర్ధకాః । ౬౨.

ఆనన్దనిస్సీమగుణాస్సర్వే వేదమయాశ్శుభాః ।

హిరణ్మయా నిత్యశుద్ధాస్సామగానోపశోభితాః ॥ ౬౩.

ஸர்வேதேவாகணாஸ்துல்யா வைகுண்டஸ்யாவனோத்ஸுகா꞉॥
சுத்தஸத்வமயாஸ்ஸர்வே நித்யாநந்தஸுகப்ரதா꞉। [சாக,
அப்ராக்ருதாஸ்ஸாஸ்வதாஸ்சவிஷ்ணுகைங்கர்யவர்த்தகா꞉॥ சாஉ·

ஆநந்தநிஸ்ஸீமகுணாஸ்ஸர்வேவேதமயாஸ்ஸுபா꞉।
ஹிரண்மயாநித்யசுத்தாஸ்ஸாமகாநோபசோபிதா꞉॥ சாந.

தா-ம்.—அந்தந்தப்ராகாரங்களிலுள்ள இதரமான தேவர்களும் முன்சொன்ன வாஸுதேவன் முதலியதேவர்களோடுஸமானமானவிக்ரஹங்களையுடையவர்களாய் ஸ்ரீவைகுண்டநாதன்கோயிலை ஸந்தோ

க்ஷமாய்ரக்ஷிக்கிருர்கள். எல்லோரும் ப்ரக்ருதிஸம்பந்தமின்றி சுத்தஸத்வஸ்வரூபமான விக்ரஹத்தை யுடையவர்களாய் ஜநநமரணங்களில்லாமல் எப்போது மங்குள்ளவர்களுக்கு அபாரமான ஆநந்தத்தை யுண்டுபண்ணுகிறவர்களாய், பகவத்கைங்கர்யத்தையேல்மேல் அதிகமாகச்செய்கிருர்கள். எல்லோரும் ஸுவர்ணம்போல் ஔஜ்வல்ய முடையவர்களாய் வேதத்தினல் பரமாத்மாவை ஸ்தோத்ரம்பண்ணிக்கொண்டு அளவில்லாத ஆநந்தத்தை யடைந்து எப்போதும் ஸாமகாநம்பண்ணுகிருர்கள். ௬௩.

ఏవన్తుపరమంధామ వ్యూహాదిమపి చిన్తయేత్ ।

ஏவந்துபரமந்தாம வ்யூஹாதிமபிசிந்தயேத்।

தா-ம்.—இவ்விதமாய்ஸ்ரீவைகுண்டநாதனையும், வ்யூஹம்விபவம் முதலியமுன் சொல்லிய அவதாரங்களையும் அங்குள்ள தேவர்களையும் த்யாநம்செய்யக்கடவன். ௬௩உ.

త్రిపాద్విభూతి రూపంతు సమ్యగ్ధ్యాత్వా విచక్షణః ॥ ౬౪

తస్యపాదవిభూతేస్తు రూపంజ్ఞేయ మనన్తకమ్ ।

த்ரிபாத்விபூதிரூபம்து ஸம்யக்த்யாத்வாவிசக்ஷணஃ॥ ௬௪.

தஸ்யபாத விபூதேஸ்து ரூபம்ஜ்ஞேயமநந்தகம்।

தா-ம்.—இப்படி பரமபதத்தையும் அங்குள்ள அவதாரங்களையும் அறிந்து த்யாநம்செய்த பின்பு ஸம்ஸாரமண்டலத்திலுள்ள அவதார ஸ்வரூபத்தையும் த்யாநிக்கக்கடவன். ௬௪உ.

వైకుణ్ఠే కారణే శ్వేత ద్వీపే లోకే సుధామ్బుధౌ ॥ ౬౫

సంస్థితంపరమాత్మానం దర్శనార్థం దివౌకసామ్ ।

வைகுண்டேகாரணேஶ்வேதத்வீபே லோகேஸுதாம்புதௌ॥ ௬௫.

ஸம்ஸ்திதம் பரமாத்மாநம் தர்சநார்த்தம் திவௌகஸாம்।

தா-ம்.—ஸம்ஸாரிகளான ப்ரஹ்மா முதலிய தேவர்கள் பரமபதத்தைக்கிட்டி அங்குள்ள பரமாத்மஸ்வரூபத்தை யநுபவிக்க யோக்யர்களல்லாமையால் அவர்கள் ஸேவிக்கும்படி இந்தலீலாவிபூதியிலிருக்கும் காரணவைகுண்டத்திலும், ஸத்யலோகத்திலும், ஶ்வேதத்வீபத்திலும், திருப்பாற்கடலிலும் எழுந்தருளியிருக்கிறபரமாத்மஸ்வரூபத்தை த்யாநம் செய்யக்கடவன். ௬௫உ.

விபவாவதாரத்யாநமும் அந்த அவதாரப்ரயோஜநமும்.

లోకసంరక్షణార్థాయ వైభవంచ సమాగతమ్ ॥ ౬౬.

నృసింహరామవిభవ విగ్రహానపి చింతయేత్ ।
దేవతిర్యఙ్మనుష్యాది విగ్రహేషు సమాస్థితాః ॥ ౬౭.

லோகஸம்ரக்ஷணார்த்தாய வைபவம் ச ஸமாகதம்॥ ௬௬.

ந்ருஸிம்ஹராமவிபவ விக்ரஹாநபிசிந்தயேத்|
தேவதிர்யங்மநுஷ்யாதி விக்ரஹேஷுஸமாஸ்திதா:॥ ௬௭.

தா-ம் —அஸுரர்களால் ஜனங்களுக்கு ஆபத்து நேரிடும்போது அதைப்போக்கி ஜனங்களை ரக்ஷிக்கைக்காக தேவஜாதி, மநுஷ்ய ஜாதி, பசுஜாதி, இவைகளில் அவதரித்த மத்ஸ்யம் கூர்மம் முதலிய விபவாவதாரங்களையும், அதில் பூர்ணாவதாரமான நரஸிம்ஹாவதார ராமாவதாரங்களையும் த்யாநிக்கக்கடவன். ௬௭.

அந்தர்யாமித்யாநமும் அந்த அவதாரத்தின் ஸ்தாநமும்.

జ్ఞేయాంతర్యామ్యవస్థాహి విష్ణోస్సర్వగతస్యవై ।
యోహిహృత్పుండరీకాంతర్వేశ్మనీహ సవిగ్రహః ॥ ౬౮.

ஜ்ஞேயாந்தர்யாம்யவஸ்தாஹி விஷ்ணோஸ்ஸர்வகதஸ்யவை|
யோஹிஹ்ருத்புண்டரீகாந்தர் வேஸ்மநீஹஸவிக்ரஹ:॥ ௬௮.

தா-ம்.—ஸர்வேஸ்வரன் எங்கும் வ்யாபித்திருக்கச் செய்தேயும் பக்தாநுக்ரஹார்த்தமாக பக்தஜநங்களுடைய மார்பின் நடுவிலிருக்கிற தாமரைமொக்குபோன்ற அவயவத்தில் பெருவிரல் ப்ரமாணம் திவ்யமங்கள விக்ரஹத்தையுடையராய் எழுந்தருளியிருக்கிறார். அந்த அந்தர்யாமியான அவதாரத்தையும் த்யாநம்செய்யக்கடவன். ௬௮.

அர்ச்சாவதாரத்யாநமும் அதன்ப்ரயோஜநமும்.

సౌలభ్యాయైవ సర్వేషా మర్చాయా మపిసన్నిధిః।
స్వరూపమీశ్వరస్యైవం జ్ఞాతవ్యాస్తద్గుణా అపి ॥ ౬౯.

ஸௌலப்யாயைவஸர்வேஷா மர்ச்சாயாமபிஸந்நிதி:|
ஸ்வரூபமீஸ்வரஸ்யைவம் ஜ்ஞாதவ்யாஸ்தத்குணாஅபி॥ ௬௯.

தா-ம் —பக்தியோகத்தினால் அந்தர்யாமியை ஸேவிக்கயோக்யதையில்லாத மூடஜநங்களும் ஸுலபமாக ஸேவிக்கும்படி ஸர்வேஸ்

வரன் அர்ச்சாவதாரம் செய்தருளினன். அந்த அர்ச்சாவதாரத்தையும் ஸர்வேஶ்வரனுடைய ஸௌலப்யம் முதலிய குணங்களையும் த்யானிக்கக்கடவன். ௬௯.

விபூதியோகத்யாநம்.

విభూతియోగ స్తస్యైవం జ్ఞాతవ్య స్సర్వదేహిభిః ।

விபூதியோகஸ்தஸ்யைவம் ஜ்ஞாதவ்யஸ் ஸர்வதேஹிபி:|

தா-ம்.—ஸர்வேஶ்வரன் எந்தெந்த வஸ்துக்களில் விசேஷ ஸாந்நித்யம்செய்திருக்கிறனே? அவைகளையும்த்யானிக்கக்கடவன். ௬௯ ௨

షడ్గుణః పరమే వ్యోమ్ని వాసుదేవస్సనాతనః ॥ ౭౦,

వ్యూహావస్థాసు తిస్రుషు గుణద్వయ మధిష్ఠితమ్ ।

ஷட்குண: பரமேவ்யோம்நி வாஸுதேவஸ்ஸநாதந:|| ௭௰.

வ்யூஹாவஸ்தாஸுதிஸ்ருஷு குணத்வயமதிஷ்டிதம்|

தா-ம்.--பரவாஸுதேவன் ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐஶ்வர்யம், வீர்யம், தேஜஸ்ஸு, என்கிற ஆறுகுணங்களையுடையவராய் பரமபதத்திலெழுந்தருளியிருக்கிறார். வ்யூஹங்களில் ஸங்கர்ஷணன், அநிருத்தன், ப்ரத்யும்நன், இம்மூவரும் இரண்டிரண்டு குணங்களையுடையவர்களாய் எழுந்தருளியிருக்கிறார்கள். ௭௰ ௨.

வ்யூஹாவதாரங்களின் வ்யாபாரத்தைச் சொல்லுகிறது.

ప్రద్యుమ్న శ్చానిరుద్ధశ్చ తథా సఙ్కర్షణో విభుః ॥ ౭౧.

జగత్సృష్టిస్థితిలయాన్ కుర్వతే గుణ భేదతః ।

ப்ரத்யும்நஶ்சாநிருத்தஶ்ச ததாஸங்கர்ஷணோவிபு:|| ௭௧.

ஜகத்ஸ்ருஷ்டிஸ்திதிலயாந் குர்வதே குணபேதத:|

தா-ம்.—வ்யூஹாவதாரங்களான ப்ரத்யும்நன், அநிருத்தன், ஸங்கர்ஷணன் இம்மூவரும் வெவ்வேறு குணங்களையங்கீகரித்து ஜகத்தைப்படைத்தல், காத்தல், அழித்தல், இவைகளைச்செய்கிறார்கள். ௭௧ ௨

வ்யூஹாவதாரங்களின் குணங்களைச் சொல்லுகிறது.

ఐశ్వర్యవీర్యవాన్ సర్గే ప్రద్యుమ్నః ప్రత్యపద్యత ॥ ౭౨

తేజశ్శక్తీ సమావిశ్య హ్యనిరుద్ధోఽప్యపాలయత్ ।

జ్ఞానవాన్ బలవాన్ లోకాన్ గ్రసేత్సఙ్కర్షణోఽవ్యయః॥ ౭౩.
ఏవంసృష్టి స్థితిలయాన్ కరోతిభగవాన్హరిః।

ஐஶ்வர்ய வீர்யவாந்ஸர்கே ப்ரத்யும்ந꞉ ப்ரத்யபத்யத|| எஉ.

தேஜஶ்ஶக்தி ஸமாவிஶ்ய ஹ்யநிருத்தோப்ய பாலயத்|
ஜ்ஞாநவாந் பலவாந்லோகாந் க்ரஸேத்ஸங்கர்ஷணோவ்யய꞉|| எங.

ஏவம்ஸ்ருஷ்டி ஸ்திதிலயாந் கரோதிபகவாந் ஹரி꞉|

தா-ம்.—ப்ரத்யும்நன், ஐஶ்வர்யம், வீர்யம், இவ்விரண்டு குணங்களை யங்கீகரித்து ஜகத்தை ஸ்ருஷ்டித்தார். அநிருத்தன், தேஜஸ்ஸு, சக்தி, இவ்விரண்டு குணங்களை யங்கீகரித்து ரக்ஷிக்கிறார். ஸங்கர்ஷணன், ஜ்ஞாநம், பலம் இவ்விரண்டு குணங்களை யங்கீகரித்து அழிக்கப்போகிறார். இப்படி ஸர்வேஶ்வரன் தானே மூன்றவதாரங்களை யெடுத்து மூன்றுவ்யாபாரங்களையும் செய்கிறார். எங உ.

ஹரிசப்தார்த்தம்.

బ్రహ్మాణ మీశం రుద్రంచ యమం వరుణ మేవచ। ౭౪.
ప్రసహ్య హరతే యస్మా త్తస్మాద్ధరి రిహోచ్యతే।

ப்ரஹ்மாண மீசம்ருத்ரம்ச யமம்வருணமேவச|| எச.
ப்ரஸஹ்யஹரதேயஸ்மாத் தஸ்மாத்தரிரிஹோச்யதே|

தா-ம்.—ஹரி꞉ என்றால் அழிக்கின்றவன் என்றர்த்தம். ஸ்ரீமந்நாராயணன் சதுர்முகப்ரஹ்மாவையும், ருத்ரனையும், யமனையும், வருணனையும், இந்திரனையும், ப்ரளய காலத்தில் அழிக்கிறபடியால் ஹரி꞉ என்கிறபெயரையுடையவராகிறார். எச உ.

ఏవ మాత్మస్వరూపంచ తథా చిద్రూప ముల్లసత్॥ ౭౫.
స్వరూప మీశ్వరస్యైవం జ్ఞాత్వా బన్ధాత్ప్రముచ్యతే।

ஏவ மாத்மஸ்வரூபம்ச ததா சித்ரூபமுல்லஸத்|| எரு.
ஸ்வரூப மீஶ்வரஸ்யைவம் ஜ்ஞாத்வாபந்தாத்ப்ரமுச்யதே|

தா-ம்.—இவ்விதமாய் ஜீவாத்மாவையும், ஜடமான சரீரத்தையும், ஈஶ்வரனையுமுள்ளபடி யறிந்தால் இந்தஸம்ஸாரத்தைவிட்டு நீங்கி மோக்ஷத்தை யடைவன். எரு உ.

ఈశ్వరో భగవాన్ విష్ణుః పరమాత్మా జగత్పతిః॥ ౭౬.
అనన్తః పురుష స్సాక్షీ పరంబ్రహ్మ శివః ప్రభుః,
హిరణ్యగర్భశ్శుచిష ద్ధంసః పరమచేతనః॥ ౭౭.

ஈஶ்வரோபகவாந் விஷ்ணுః பரமாத்மா ஜகத்பதிः॥ எ௬.
அநந்தः புருஷஸ்ஸாக்ஷீ பரம்ப்ரஹ்மஶிவःப்ரபுः।
ஹிரண்யகர்ப்பஶ்ஶுசிஷத்தம்ஸःபரமசேதநः॥ எஎ.

தா-ம்.—இனி பரமாத்மாவினுடைய குணங்களை அறிகைக்காக அவனுடைய குணங்களுக்கு வாசகமான திருநாமங்களைச் சொல்லுகிறது.—அந்த பரமாத்மா எல்லாவஸ்துக்களையும் தன்னுடைய ஆஜ்ஞையின் கீழடக்கிப் பரிபாலநம் பண்ணுகிறார். ஸமஸ்தகல்யாணகுண பரிபூர்ணர். எல்லாவஸ்துக்களிலு மெப்போது முள்ளும் வெளியும் வ்யாபித்திருக்கிறார். ஸமஸ்தவஸ்துக்களுக்கு மாதாரமானவர். ஜகத்துக்கு ரக்ஷகர். ஸ்வரூபத்திலும் மஹிமையிலு மளவில்லாதவர். ஆஶ்ரிதர்களுடைய அல்பமான குணத்தையும் பெரிதாகக்கொள்ளுகிறவர். ஸமஸ்தவஸ்துக்களையும் ஒரே காலத்தில் ப்ரத்யக்ஷமாகப்பார்க்கிறவர். ஆஶ்ரிதர்குணங்களை வ்ருத்தி பண்ணிவைக்கிறவர். மங்களகரமானவர். ஸமர்த்தர். ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமி. தேஜஸ்வியான ஸூர்யனுக்கு அந்தர்யாமி. உத்தமமான ஸ்தாநத்தையடைந்தவர். ஜ்ஞாநமுடையவர்களில் ஶ்ரேஷ்டர். எஎ.

నారాయణ స్సర్వగతః పరంజ్యోతిః పరాత్పరః।
మహేన్ద్ర స్సవితా రుద్ర స్థాణు స్సూర్యః ప్రజాపతిః॥ ౭౮

நாராயணஸ்ஸர்வகதः பரஞ்ஜ்யோதிः பராத்பரः।
மஹேந்த்ரஸ்ஸவிதாருத்ர ஸ்ஸ்தாணுஸ் ஸூர்யःப்ரஜாபதி:எஅ.

தா-ம்.—அந்த பரமாத்மா எல்லாராலு மடையத்தக்கவருமாய் எல்லாரையும் தன்னிடத்திலடைவிப்பித்துக்கொள்ளுகிறவருமானவர். எங்குமுள்ளவர். தேஜஸ்ஸையுடைய அக்நி முதலியவர்களுக்கும் தேஜஸ்ஸைக் கொடுத்துப்ரகாசிப்பிக்கப்பண்ணுகிற மஹாதேஜஸ்வி. ஜடங்களைக்காட்டிலும்ஶ்ரேஷ்டமான ஜீவாத்மாவுக்கும் ஶ்ரேஷ்டமானவர். மஹத்தான ஐஶ்வர்யத்தையுடையவர். எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கிறவர். ருத்ரனுக்கு அந்தர்யாமியானவர். எப்போதும் ஸ்திரமாயிருக்கிறவர். ப்ராணிகளை ஸந்மார்க்கத்தில் ப்ரேரணம்செய்கிறவர். ப்ராணிகளை ஆபத்தில் நின்றும் ரக்ஷிக்கிறவர். எஅ.

అగ్నిర్యమః పతిర్యజ్ఞో వాయుస్సోమ స్తథామృతః!
హిరణ్మయ స్సుపర్ణశ్చ తార్క్ష్యో వేదమయ స్త్రయీ॥ ౭౯

அக்நிர்யம:பதிர்யஜ்ஞோ வாயுஸ்ஸோமஸ்ததாம்ருத:|
ஹிரண்மயஸ்ஸுபர்ணஶ்ச தார்க்ஷ்யோவேதமயஸ்த்ரயீ|| ௭௯

தா-ம்.—அந்த பரமாத்மா உத்தமமான லோகங்களை யடைவிப்பிக்கிறவர். பாபிகளைத் தண்டிக்கிறவர். ஜநங்களுக்கு அந்நம் முதலியவைகளைக் கொடுத்து ரக்ஷிக்கிறவர். ஸமஸ்தயஜ்ஞங்களினாலாராதிக்கத்தகுந்தவர். எங்கும் வ்யாபிக்கிறவர். மோக்ஷத்தைக்கொடுக்கிறவர். அழிவில்லாதவர். காந்தியையுடையவர். ஆஶ்ரிதர் மநோரதங்களைப் பூரணம் பண்ணுகிறவர். கருத்மானுக் கந்தர்யாமி. வேதங்களினால் ஸ்தோத்ரம் செய்யப்படுகிறவர். வேதபுருஷனுக்கு அந்தர்யாமியாயானவர். ௭௯.

బ్రహ్మణ్యో బ్రహ్మవిద్బ్రహ్మా బ్రహ్మణస్పతి రేవచ।
మిత్ర స్సత్య స్తథా ధర్మ శ్శుచి ర్వాచస్పతిః కవిః॥ ౮౦.

ப்ரஹ்மண்யோப்ரஹ்மவித்ப்ரஹ்மாப்ரஹ்மணஸ்பதிரேவச|
மித்ரஸ்ஸத்யஸ்ததாதர்மஶ்ஶுசிர்வாசஸ்பதி: கவி:|| ௮௦.

தா-ம்.—வைதிக கர்மங்களில் பூஜிக்கத்தக்கவர். வேதத்தின் வாஸ்தவார்த்தத்தை யறிந்தவர். பெரிய ப்ரபாவத்தையுடையவர். சதுர்முகப்ரஹ்மாவுக்கும் ரக்ஷகர். ஜநங்களிடத்தில் ப்ரீதியுடையவர். விகாரமின்றி எப்போது மொருபடியாயிருக்கிறவர். ஜகத்துக்கு ஆதாரமானவர். கபடம் முதலியதோஷங்களில்லாதவர். ஸமஸ்தவாக்குக்களுக்கு மர்த்தமாயிருக்கிறவர். மநஸ்ஸு உருகும்படி சாதுர்யமாய் வார்த்தை சொல்லுகிறவர். ௮௦.

ఏవమాదీని నామాని వైదికాని జగత్పతేః।
దేవానామపి నామాని విష్ణో శ్శ్రీశస్య వై విభోః॥ ౮౧.

వాచకాని భవన్త్యేవ తత్రతత్ర వివక్షయా।
నారాయణాదినామాని త్వన్యేషాం కుత్రచిన్నతు॥ ౮౨.

ஏவமாதீநிநாமாநி வைதிகாநி ஜகத்பதே:|
தேவாநாமபிநாமாநி விஷ்ணோஶ்ஶ்ரீசஸ்யவைவிபோ:|| ௮௧.

வாசகாநிபவந்த்யேவ ததந்ததந்யவிவக்ஷயா।
நாராயணேதி நாமாநி த்வந்யேஷாம் குத்ராசிந்நது॥ ௮௨.

தா-ம்.—இவைமுதலாக வேதத்திற் சொல்லியிருக்கிற நாமங்களும்; தேவர்களுக்கு வாசகமான இந்த்ரன் அக்நி முதலிய நாமங்களும் ஜகத்பதியாய் ஸர்வவ்யாபகனான ஸ்ரியப்பதியையே ப்ரதிபாதிக்கின்றன. ஸ்ரியப்பதிக்குவாசகமாகில் இந்த்ரன் முதலிய சப்தங்கள் அந்தந்த தேவர்களைச் சொல்லுகிறதெப்படியெனில்; இவரிடத்திலுண்டான குணங்களினேகதேச மவர்களிடத்திலிருக்கிறபடியால் அந்த குணத்துக்கு வாசகமான சப்தங்களினால் அவர்கள்சொல்லப்படுகிறார்கள். அதாவது—இந்த்ரன்என்றால்ஐஸ்வர்யத்தையுடையவன்என்றர்த்தம். அந்தபதம் பரிபூர்ணமான ஐஸ்வர்யத்தையுடைய ஸ்ரியப்பதியையே முக்யமாயும் அல்பமான ஐஸ்வர்யத்தையுடைய இந்த்ரனை கௌணமாயும் சொல்லுகிறது. நாராயணன் முதலிய நாமங்கள் ஸ்ரியப்பதியையொழிய வேறு தேவர்களை எவ்விதத்திலும் சொல்லமாட்டா. ௮௨.

లౌకికా వైదికా శ్శబ్దా నామాన్యస్య భవన్తి వై।
తస్మాత్తు భగవా న్విష్ణుః పరమాత్మా స ఈశ్వరః ౮౩॥

லௌகிகா வைதிகாஶ்ஶப்தா நாமாந்யஸ்ய பவந்திவை।
தஸ்மாத்து பகவாந்விஷ்ணு: பரமாத்மா ஸஈஶ்வர:॥ ௮௩.

தா-ம்.—தேவதத்தன்முதலிய லௌகிகசப்தங்களும், அக்நிமுதலிய வைதிக சப்தங்களும் ஸ்ரியப்பதிக்கே வாசகங்களாயிருக்கின்றன. உலகத்தில் தேவதத்தன்முதலிய சப்தங்கள் சரீரத்துக்குப் பெயராயினும் தேவதத்தன்செய்கிறான் அறிகிறான் என்று சொல்லுகையாலே அந்த சரீரத்தையுடைய ஆத்மாவைச்சொல்லுகை அநுபவஸித்தமாயிருக்கிறது. அதுபோல் ஆத்மாவைச் சொல்லுகிற அந்த சப்தங்களும் ஆத்மாவுக்கு அந்தர்யாமியான பரமாத்மாவையே சொல்லுகிறது. ஆகையால் ஸமஸ்தசப்தங்களுக்கும் வாசகனாய் ஸமஸ்தகல்யாணகுண பரிபூர்ணனாய் ஸர்வவ்யாபகனாய் ஸர்வநியந்தாவான ஸ்ரியப்பதியே பரமாத்மாவாகிறான். ௮௩.

స్వరూపమీశ్వరస్యైకం జ్ఞాతవ్యం మునిసత్తమాః।
స్వరూపగుణఐశ్వర్యం విజ్ఞేయం పరమాత్మనః॥ ౮౪॥

ஸ்வரூப மீஸ்வரஸ்யைவம் ஜ்ஞாதவ்யம் முநிஸத்தமா:|
ஸ்வரூபகுண ஐஸ்வர்யம் விஜ்ஞேயம்பரமாத்மந:|| ௮௪.

தா-ம்.—ருஷிகளே! இவ்விதமாய் பரமாத்ம ஸ்வரூபத்தையும், குணங்களையும் ஐஸ்வர்யத்தையும் அறியக்கடவன். ௮௪.

సంబన్ధ ఆత్మనోజ్ఞేయశ్చే శ్వరస్యమునీశ్వరాః।

ஸம்பந்த ஆத்மனோஜ்ஞேய ஸ்சேஸ்வரஸ்யமுநீஸ்வரா:

தா-ம்.—தனக்கும் ஈஸ்வரனுக்கும் உண்டான ஸம்பந்தத்தையும் த்யாநிக்கக்கடவன். ௮௫.

திருவஷ்டாக்ஷரத்தி னர்த்தாநுஸந்தாந க்ரமம்.

అకారవాచ్యస్యవిభో రేవశేష స్త్వహంసదా॥ ౮౬.

నచాపి మమకర్తాస్మి పరవాన స్యతోహ్యహమ్।
నిత్యంనారాయణస్యైవ కైఙ్కర్యం కరవాణ్యహమ్॥ ౮౭.

మన్త్రార్థం చిన్తయే దేవం ప్రాత రుత్థాయ వైష్ణవః॥

அகாரவாச்யஸ்யவிபோ ரேவசேஷஸ்த்வஹம்ஸதா|| ௮௬.

நசாபிமமகர்த்தாஸ்மி பரவாநஸ்மியதோஹ்யஹம்|
நித்யம் நாராயணஸ்யைவ கைங்கர்யம் கரவாண்யஹம்|| ௮௭.

மந்த்ரார்த்தம் சிந்தயே தேவம் ப்ராதருத்தாயவைஷ்ணவ:|

தா-ம்.—திருவஷ்டாக்ஷரம் ஓம் - நம: - நாராயணாய - என்கிற மூன்று பதங்கள் கூடியிருக்கும். அதில் முதல்பதமானப்ரணவம் அ, உ, ம், என்கிற மூன்றக்ஷரங்களோடு கூடியிருக்கும். அ—என்பதற்கு ஸர்வேஸ்வரன்பொருட்டு என்றும், உ—என்பதற்கு அவன் பொருட்டே, வேறொருவனுக்கல்லவென்கிற அவதாரணமும், ம்—என்பதற்கு ஜீவனானநான் என்றும் அர்த்தங்கள். ஜடமான இந்த சரீரத்தைக்காட்டிலும்வேறாய்ஜ்ஞானஸ்வரூபனான நான் ஸகலஜகத்துக்கும் காரணமான ஸ்ரீமந்நாராயணனுக்கே சேஷபூதன்; வேறொருவருக்கும் சேஷபூதனல்லன் என்று ப்ரணவத்தினர்த்தம். இரண்டாவது பதமான "நம:" என்பதை ஆவ்ருத்திசெய்துகொள்ளவும். அதில் ஒன்று நம:—என்று ஒருபதமாயும், மற்றொன்று ந—ம:—என்று இரண்டுபதமாயுமிருக்கும். நம:—என்பதற்கு ரக்ஷணம் என்றும், ம:—என்பதற்கு என்னுடையது என்றும், ந—என்பதற்கு அன்று

என்றும் அர்த்தங்கள். என்னுடைய ரக்ஷணத்துக்கு நான்கர்த்தாவன்று (என்னிஷ்டப்படிநான் ஒருகார்யம் செய்யத்தக்கவனல்லன்) ஈஶ்வரனுக்குப்பாரதந்த்ரனாய் அவன்செய்தபடியே நானிருக்கக்கடவன் என்று நம:பதத்துக்கு அர்த்தம். மூன்றாவது பதமான நாராயணபதத்துக்கு ப்ராப்யனென்றும், ப்ராபகனென்னும், அதன் பிறகுள்ள ஆய—என்கிற சதுர்த்திக்குக்கைங்கர்யமும் அர்த்தங்கள். எனக்கு ப்ராப்யனும் ப்ராபகனுமிருக்கிற ஸ்ரீமந்நாராயணனுக்கே எப்போதும் கைங்கர்யம் செய்யக்கடவேன் என்று நாராயணாய - என்பதற்கு அர்த்தம். ஆக இந்தத்திருமந்த்ரார்த்தத்தை ஸ்ரீவைஷ்ணவன் உதயத்திலெழுந்திருந்து அநுஸந்திக்கக்கடவன். ௮௬

ఇత్యాత్మేశ్వరయో రూపం జ్ఞాత్వా మన్త్రేణమన్త్రవిత్ ॥ ౮౭॥
స్వరూప మాత్మనో జ్ఞాత్వా తద్వృత్తింశిక్షయేద్ద్వయాత్ ।

இத்யாத்மேஶ்வரயோரூபம் ஜ்ஞாத்வாமந்த்ரேணமந்த்ரவித்॥ ௮௭.
ஸ்வரூபமாத்மனோஜ்ஞாத்வா தத்வ்ருத்திம்சிக்ஷயேத்த்வயாத்।

தா-ம்.—இவ்விதமாய் ஜீவாத்ம பரமாத்ம ஸ்வரூபங்களையறிந்து, திருமந்த்ரத்தினால் ஜீவாத்மாவுக்கு சேஷத்வபாரதந்த்ர்ய கைங்கர்யங்கள் ஸ்வரூபமென்றும் அறிந்து, த்வயமந்த்ரத்தினால் ஜீவன்செய்யவேண்டும் வ்யாபாரத்தை அநுஷ்டிக்கக்கடவன்.

సర్వేశదయితా నిత్యా సర్వదా జగదాశ్రయా॥ ౮౮
నిత్యానపాయినీ విష్ణోర్జగన్మాతోపకారిణీ ।
తయా సీన శ్రియా సార్థం గుణవాన్పరమేశ్వరః॥ ౮౯॥
శరణం తస్య చరణౌ వ్రజామ్యహ మకిఞ్చనః।
శ్రియాసీనాయ హరయే స్వామినే పరమాత్మనే॥ ౯౦॥
స్వామిచిత్తానురూప్యేణ శేషవృత్తిం కరోమ్యహమ్ ।
ఇత్థం ద్వయార్థం సఞ్చిన్త్య స్వకర్త్రాదిచతుష్టయమ్ ॥ ౯౧॥
ఉపాయభావాత్సన్త్యజ్య త మేవ శరణం వ్రజేత్ ।

ஸர்வேசதயிதாநித்யா ஸர்வதாஜகதாஶ்ரயா॥ ௮௮.
நித்யாநபாயிநீவிஷ்ணோர் ஜகந்மாதோபகாரிணீ।
தயாஸீநஶ்ரியாஸார்த்தம் குணவாந்பரமேஶ்வர:॥ ௮௯.

ஶரணம்தஸ்யசரணௌ வ்ரஜாம்யஹமகிஞ்சந:|
ஶ்ரியாஸீநாயஹ்ருதயே ஸ்வாமிநேபரமாத்மநே|| ௯௰.

ஸ்வாமிசித்தாநுரூப்யேண சேஷவ்ருத்திம்கரோம்யஹம்|
இத்தம்த்வயார்த்தம்ஸஞ்சிந்த்ய ஸ்வகர்மாதிசதுஷ்டயம்|| ௯௧.

உபாயபாவாத்ஸந்த்யஜ்ய தமேவசரணம்வ்ரஜேத்|

தா-ம்.—நான் இத்தனைகாலம் அஜ்ஞாநத்தினுல் பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரங்களைச்செய்து இப்போது பகவானைக்கிட்டிச் சரணம்புகில், அவன் ஸ்வதந்த்ரனுய் ப்ரபுவாகையால் பாபியான வென்னைத்தண்டிப்பனென்று பயப்படவேண்டா, புத்ரன்குற்றங்களைக்கண்டு பிதாவெறுக்கப்புகில் அருகிருந்த மாதாவானவள் அப்பிழைகளைப் பொறுப்பித்துப்பிதாவைக்கொண்டு புத்ரனைரக்ஷிப்பிக்குமாபோலே உலகத்துக்கெல்லாம் மாதாவாய் ஸகலஜகத்துக்குமாஶ்ரயணீயையாயிருக்கிற ஸ்ரீமஹாலக்ஷ்மி, ஸர்வேஶ்வரன்தன் சொல்வழிவரும்படி அவனுக்கு அத்யந்த மிஷ்டமான நாயகியாய் எப்போது மவன்பக்கத்திலிருந்து நம்பிழைகளைப் பொறுப்பித்து ஸர்வேஶ்வரன் திருவடிகளிலாஶ்ரயிப்பிக்கிறுள். ஆகையால் ஸர்வேஶ்வரனை ஸுலபமாகவாஶ்ரயிக்கலாம். அந்த ஸ்ரீமஹாலக்ஷ்மீஸமேதனுய், ஆஶ்ரிதர்தோஷங்களைக்குணமாகக்கொள்ளுகையாகிற வாத்ஸல்யம் முதலிய குணங்களையுடையவனுன ஸர்வேஶ்வரன்திருவடிகளை வேறொருபாய மில்லாத நான் உபாய மாகப்பற்றுகிறேன். இது முதல்வாக்யத்தினர்த்தம். இனி இரண்டாம் வாக்யத்தினர்த்தம் சொல்லுகிறது—ஸ்ரீமஹாலக்ஷ்மீஸமேதனுய், நமக்குஸ்வாமியானஸர்வேஶ்வரன்பொருட்டு அவன்திருவுள்ளத்துக்குகப்பான கைங்கர்யத்தைச்செய்யக்கடவேன். இவ்விதமாகத்வயத்தினர்த்தத்தை யநுஸந்தித்து, கர்மம், ஜ்ஞாநம், பக்தி, ப்ரபத்தியாகிய இந்த நாலையும் தன்னுடைய இஷ்டப்ராப்திக்கு உபாயமென்று நினையாமல்ஸர்வேஶ்வரனையே உபாயமாகப் பற்றக்கடவன். ௯௧௨.

కర్తకృత్యేద్వశక్తస్తు సన్తుష్ట్యైపరమాత్మనః ॥ ౯౨॥
ప్రాతరుత్థాయసతతం శౌచం కృత్వా యథావిధి।
ప్రక్షాల్య పాదౌ హస్తౌచ పశ్చాదాచమనం చరేత్ ॥ ౯౩॥

கர்மக்ருத்யேஷ்வசக்தஸ்து ஸந்துஷ்ட்யைபரமாத்மந:|| ௯௨
ப்ராதருத்தாயஸததம் சௌசம்க்ருத்வாயதாவிதி|
ப்ரக்ஷாள்யபாதௌஹஸ்தௌச பஶ்சாதாசமநம்சரேத்|| ௯௩.

தா-ம்.—பகவத்கைங்கர்ய ரூபமாகக் கர்மயோகம் முதலியவைகளை அநுஷ்டிக்கச்சக்தியில்லாதவன், பரமாத்மப்ரீத்யர்த்தமாக மேல் சொல்லப்போகிற நித்யகர்மங்களை யநுஷ்டிக்கக்கடவன். அதாவது உதயத்திலெழுந்திருந்து தேகபாதையை நிவ்ருத்தி பண்ணிக்கொண்டு சௌசத்தைக்க்ரமமாகச் செய்துகொண்டு கைகால்களை யலம்பிப் பின்பு ஆசமநம்செய்யவேண்டியது. ௯௩.

తతస్స్నానం ప్రకుర్వీత దన్తధావనపూర్వకమ్।
కృత్వాఘమర్షణస్నానం తర్పయన్పితృదేవతాః॥ ౯౪॥
సకౌపీనం ధౌతవస్త్రం వసిత్వాచోత్తరీయకమ్।
శుభ్రయా వై మృదా సమ్యగూర్ధ్వపుణ్డ్రాణి ధారయేత్॥ ౯౫॥

ததஸ்ஸ்நாநம்ப்ரகுர்வீத தந்ததாவநபூர்வகம்|
க்ருத்வாகமர்ஷணஸ்நாநம் தர்பயந்பித்ருதேவதா:॥ ௯௪.

ஸகௌபீநம்தௌதவஸ்த்ரம் வஸித்வாசோத்தரீயகம்|
சுப்ரயாவைம்ருதாஸம்யகூர்த்வ புண்ட்ராணிதாரயேத்|| ௯௫.

தா-ம்.—பின்புதந்ததாவநம்செய்து ஸ்நாநம்பண்ணி, * அகமர்ஷணமென்கிற மந்த்ரங்களைச்சொல்லி ஸ்நாநம்பண்ணி, தேவபித்ருதர்பணத்தைச்செய்து, கௌபீநம், வெண்வஸ்த்ரம், உத்தரீயம், இவைகளையுடுத்து, வெண்ம்ருத்திகையினுல் ப்ரகாசமாக ஊர்த்வபுண்ட்ரத்தையணியக்கடவன். ௯௫.

పవిత్రపాణిశ్శుద్ధాత్మా సన్ధ్యాంకుర్యాద్విధానతః।
ఉపస్థాయ చ సావిత్ర్యా రవిమణ్డలమధ్యగమ్॥ ౯౬॥
హరిం హిరణ్మయం ధ్యాత్వా కృత్వా చైవ ప్రదక్షిణమ్।
కుసుమాక్షతసంయుక్తమర్ఘ్యం తస్మై నివేదయేత్॥ ౯౭॥

பவித்ரபாணிஶ்ஶுத்தாத்மா ஸந்த்யாம்குர்யாத்விதாநத:|
உபஸ்தாயசஸாவித்ர்யா ரவிமண்டலமத்யகம்|| ௯௬.

ஹரிம்ஹிரண்மயம்த்யாத்வா க்ருத்வாசைவப்ரதக்ஷிணம்|
குஸுமாக்ஷதஸம்யுக்த மர்க்யம்தஸ்மைநிவேதயேத்|| ௯௭.

தா-ம்.—இரண்டு விஸ்வாமித்ரப் புல்லினுல் பவித்ரம்செய்து அதைப்பவித்ரவிரலிலணிந்து சூத்ரர் முதலியவர்களைத்தொடாமல் பரிசுத்தனுயிருந்து, அவரவர்கள் க்ருஹ்யஸூத்ரவிதிப்படி ஸந்த்யா

* அபவித்ர: பவித்ரோவா ஸர்வாவஸ்தாம் கதோபிவா ! யஸ்ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸபாஹ்யாப்யந்தரஶ்ஶுசி:? என்பது.

வந்தநம்செய்து, ஸாவித்ரீ மந்த்ரத்தினல் ஸூர்யமண்டலத்தில் ஸ்வர்ணமயமான விக்ரஹத்துடன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாராயணனை த்யாநம்பண்ணி ப்ரதக்ஷிணம்செய்து, புஷ்பம் அக்ஷதைகளோடு கூடிய ஜலத்தையெடுத்துப் பரமாத்மாவை யுத்தேசித்து அர்க்யம் கொடுக்கவேண்டியது. ௯௭.

జప్త్వా నత్వా గృహం గత్వా సంస్తువన్ సంయతేన్ద్రియః।
ప్రక్షాళ్య పాదా వాచమ్య పూజామణ్డల మావిశేత్॥ ౯౮॥

ஜப்த்வாநத்வாக்ருஹம்கத்வாஸம்ஸ்துவந்ஸம்யதேந்த்ரியஃ|
ப்ரக்ஷாள்யபாதாவாசம்ய பூஜாமண்டலமாவிசேத்|| ௯௮.

தா-ம்.—பின்பு காயத்ரியை ஜபித்துப் பரமாத்மாவை ஸ்தோத்ரம்செய்து நமஸ்கரித்து க்ருஹத்திற்குச்சென்று ஜிதேந்த்ரியனுயிருந்து கைகால்களையலம்பி ஆசமநம்செய்து பகவதாராதநம் செய்யும் ஸ்தாநத்தில் (பெருமாள் ஸந்நிதியில்) ப்ரவேசிக்கக்கடவன். ௯௮.

సుసత్కృతం శుభం రమ్యం ధూపదీపాదిశోభితమ్ ।
వితానైః పుష్పమాలాద్యై స్సర్వత స్సమలఙ్కృతమ్॥ ౯౯॥

ஸுஸத்க்ருதம்சுபம்ரம்யம் தூபதீபாதிசோபிதம்|
விதானைஃ புஷ்பமாலாத்யைஸ்ஸர்வதஸ்ஸமலங்க்ருதம்|| ௯௯.

தா-ம்.—பின்பு அந்தஸந்நிதியைக் குப்பையில்லாமல் சோதித்து ஜலத்தினுலலம்பி மங்களகரமாயு மழகாயு மிருக்கும்படி கோலமிட்டுத் திருவிளக்கேற்றிப் பரிமளங்கமழும்படி தூபம்சேர்த்து மேல்கட்டுகளினுலும் புஷ்பங்களினுலுமலங்கரிக்கக்கடவன். ௯௯.

తత్ర హేమసుశోభాఢ్యాం రమ్యాం పరమనోహరమ్ ।
సమ్యగాస్తీర్య పర్యఙ్కం చిత్రం రమ్యం సుఖావహమ్॥ ౧౦౦॥
ధర్మాదీ నర్చయే త్తత్ర వేద్యాంపీఠపదాత్మకాన్ ।
ఆకీర్ణై స్తులసీపుష్పై స్సమన్తా దుపశోభితే ॥ ౧౦౧॥
తస్మి న్నివేశ్య లక్ష్మీశం రమాజుష్టం ప్రపూజయేత్।

தத்ரஹேமஸுசோபாட்யம் ரம்யாம்பரமனோஹரம்|
ஸம்யகாஸ்தீர்யபர்யங்கம் சித்ரம்ரம்யம்ஸுகாவஹம்|| ௧00.

தர்மாதீநர்ச்சயேத்தத்ர வேத்யாம்பீடபதாத்மகாந்|
ஆகீர்ணைஸ்துளஸீபுஷ்பை ஸ்ஸமந்தாதுபசோபிதே|| ௧0௧.

தஸ்மிந்நிவேஶ்யலக்ஷ்மீசம் ரமாஜுஷ்டம்ப்ரபூஜயேத்|

தா-ம்.—அங்கு ஸுவர்ணமயமாய், உயர்ந்த வஸ்த்ரங்களையுடையதாய், பார்வைக்கும் மநஸ்ஸுக்கும் ஆநந்தஜநகமாய் விசித்ரமான ஆஸநமிட்டு அதில் பகவானெழுந்தருளியிருக்கும் ஸிம்ஹாஸநத்தைக் கால்கள்போல் தாங்கிக்கொண்டிருக்கிற தர்மன்முதலியவர்களை அர்ச்சித்து, துளஸிகளும் புஷ்பங்களும் நான்கு பக்கத்திலுமிறைந்து அழகியதாயிருக்கிற ஸிம்ஹாஸநத்தின் மேல் லக்ஷ்மீஸமேதனை ஸ்ரீமந்நாராயணனை எழுந்தருளப்பண்ணித் திருவாராதநம் ஸமர்ப்பிக்கவேண்டியது. ௧௦௧ உ.

ఉపవిశ్యాసనే సమ్యక్కౌశే కార్ష్ణాయనేపి వా ॥ ౧౦౨॥
ప్రాణాయామత్రయం కృత్వా పశ్చాన్న్యాసం సమాచరేత్ ।

உபவிஶ்யாஸநேஸம்யக் கௌஶேகார்ஷ்ணாயநேபிவா|| ௧௦௨.
ப்ராணாயாமத்ரயம்க்ருத்வா பஶ்சாந்ந்யாஸம்ஸமாசரேத்|

தா-ம்.—பின்புதான் தர்பாஸநத்திலாவது க்ருஷ்ணாஜிநத்திலாவது உட்கார்ந்து மூன்று ப்ராணாயாமங்களைச்செய்து அநந்தரம் த்வயமந்த்ரத்தினால் அங்கந்யாஸகரந்யாஸங்களைச்செய்யக்கடவன். ௧௦௨ உ.

షట్పదై రఙ్గులీ హస్తే షడఙ్గేషు తథైవ చ॥ ౧౦౩॥
మూర్ధ్నిఫాలే నేత్రయోశ్చ నాసికాశ్రవణాననే ।
భుజయో ర్హృత్ప్రదేశేచ స్తనయో ర్నాభిమణ్డలే ॥ ౧౦౪॥
పృష్ఠేచ జఘనే కట్యో రూర్వో ర్జాన్వోశ్చ పాదయోః ।
మన్త్రరత్నాక్షరాణ్యత్ర క్రమేణాఙ్గేషు విన్యసేత్ ॥ ౧౦౫॥

ஷட்பதைரங்குளீஹஸ்தே ஷடங்கேஷுததைவச| ௧௦௩.
மூர்த்நிபாலேநேத்ரயோஶ்ச நாஸிகாஶ்ரவணாநநே|
புஜயோர்ஹ்ருத்ப்ரதேஶேச ஸ்தநயோர்நாபிமண்டலே|| ௧௦௪.
ப்ருஷ்டேசஜகநேகட்யோரூர்வோர்ஜாந்வோஶ்சபாதயோ:
மந்த்ரரத்நாக்ஷராண்யத்ர க்ரமேணாங்கேஷுவிந்யஸேத்|| ௧௦௫.

தா-ம்.—ஸ்ரீமந்நாராயண சரணௌ.—சரணம்,—ப்ரபத்யே,—ஸ்ரீமதே,—நாராயணாய,—நம:,—என்கிற ஆறுபதங்களினால் க்ரமமாக இரண்டு கைகளிலுமுள்ள (௧) பெருவிரல், (௨) ஆள்காட்டிவிரல்,

(௩) நடுவிரல், (௪) மோதிரவிரல், (௫) சின்னவிரல், (௬) உள்ளங்கை புறங்கைகள், இவைகளில் கரந்யாஸத்தையும், (௧) ஹ்ருதயம், (௨) சிரஸ்ஸு, (௩) குடுமி, (௪) கண், (௫) புஜம், (௬) தன்னைச்சுற்றும் ஆகிய இந்த விடங்களில் அங்கந்யாஸத்தையும்செய்து, த்வயமந்த்ரத்திலுள்ள இருபத்தைந்து அக்ஷரங்களை (௧) சிரஸ்ஸு, (௨) நெற்றிக்கட்டு, (௩-௪) இரண்டு கண்கள், (௫-௬) இரண்டு மூக்குகள், (௭-௮) இரண்டு காதுகள், (௯) வாய், (௧௦-௧௧) இரண்டு புஜங்கள், (௧௨) மார்பு, (௧௩-௧௪) இரண்டு ஸ்தநங்கள், (௧௫) கொப்பூழ், (௧௬) முதுகு, (௧௭) இடுப்புக்குமுன்பாகம், (௧௮-௧௯) இரண்டு இடுப்புகள், (௨௦-௨௧) இரண்டு துடைகள், (௨௨-௨௩) இரண்டு முழங்கால்கள், (௨௪-௨௫) இரண்டு பாதங்கள், ஆகிய இருபத்தைந்து இடங்களிலும் க்ரமமாக ந்யாஸம் செய்யவேண்டியது. ௧௦௫

పఞ్చోపనిషదాం న్యాసం తన్మన్త్రైరుపవిన్యసేత్।
పరే వ్యోమ్ని స్థితం దేవం శ్రీభూమిభ్యాం చ నీళయా॥ ౧౦౬
తత్రావాహ్య పరం వ్యోమ సవిమానం సమణ్టపమ్।
పీఠంచ నాగపర్యఙ్కం తత్రాసీనం శ్రియా సహ॥ ౧౦౭॥
చతుర్భుజం సున్దరాఙ్గం శఙ్ఖచక్రగదాధరమ్।
వామాఙ్కస్థశ్రియోపేత మర్చయే దచ్యుతం బుధః॥ ౧౦౮॥
ఆవాహ్య ముద్రయా సమ్యగాసనం చ నివేదయేత్।

பஞ்சோபநிஷதாம்ந்யாஸம் தந்மந்த்ரைருபவிந்யஸேத்।
பரேவ்யோம்நிஸ்திதம்தேவம் ஸ்ரீபூமிப்யாஞ்சநீளயா॥ ௧௦௬.
தத்ராவாஹ்யபரம்வ்யோம ஸவிமாநம்ஸமண்டபம்।
பீடஞ்சநாகபர்யங்கம் தத்ராஸீநம்ஸ்ரியாஸஹ॥ ௧௦௭.
சதுர்புஜம்ஸுந்தராங்கம் சங்கசக்ரகதாதரம்।
வாமாங்கஸ்தஸ்ரியோபேத மர்ச்சயேதச்யுதம்புத:॥ ௧௮.
ஆவாஹ்யமுத்ரயாஸம்யகாஸநஞ்சநிவேதயேத்।

தா-ம்.—பஞ்சோபநிஷந்மந்த்ரங்களினால் பஞ்சோபநிஷத்துக்களுடைய ந்யாஸத்தை பகவத்விக்ரஹத்திற்செய்து, பரமபதத்தில் ஸ்ரீபூமிநீளாதேவீஸமேதனாய் நிரவதிகஸௌந்தர்யயுக்தனாய் திருவநந்தாழ்வான் மேல்வீற்றிருக்கும் ஸ்ரீமந்நாராயணனை, திருவநந்தாழ்வான், திவ்யஸிம்ஹாஸநம், திருமாமணிமண்டபம், திவ்யவிமாநம், பரம

பதம், இவைகளுடன்கூட அந்த திவ்யமங்கள விக்ரஹத்திலாவாஹநம் செய்து, நான்கு திருக்கைகள், திருவாழி, திருச்சங்கு, கௌமோதகீ என்கிற கதை, ஆகிய இந்த திவ்யாயுதங்கள், ஸௌந்தரமான திவ்யமங்கள விக்ரஹம் இவைகளையுடையவராய், இடதுமடியிலெழுந்தருளியிருக்கிற ஸ்ரீமஹாலக்ஷ்மியை யுடையவரான ஸ்ரீமந்நாராயணனுக்குத் திருவாராதநம் செய்யவேண்டும். அப்பொழுது முதலில் முத்ரையினு லாவாஹநம் செய்து பின்பு ஆஸநம் ஸமர்ப்பிக்கவேணும். ௧௦௮.

(பஞ்சோப நிஷத்துக்களாவன—பரமேஷ்டி, புருஷன், விஶ்வம், நிவ்ருத்தம், ஸர்வம் என்று பெயரையுடைய பகவானுடைய ஐந்து சக்திகள், பஞ்சோப நிஷந்மந்த்ரங்களாவன—ஷௌம் நம꞉ பராயபரமேஷ்ட்யாத்மநே வாஸுதேவாயநம꞉, யாம்நம꞉ பராயபுருஷாத்மநே ஸங்கர்ஷணாயநம꞉ ராம்நம꞉ பராயவிஶ்வாத்மநே ப்ரத்யும்நாயநம꞉, வாம்நம꞉பராய நிவ்ருத்தாத்மநே அநிருத்தாயநம꞉, லாம நம꞉ பராயஸர்வாத்மநே ஸ்ரீமந்நாராயணாயநம꞉ என்பவைகள், ஆவாஹநீ, ஸ்தாபநீ, ஸந்நிதாபநீ, முதலியவைகளும், சக்ரமுத்ரை, சங்கமுத்ரை முதலியவைகளும் முத்ரைகள். இவைகளின் ஸ்வரூபம் ஒருவர் நேரில் காட்டித் தெரிந்துகொள்ள வேண்டியதாகையால் இங்கு எழுதப்படவில்லை).

అర్చయిత్వా గురూన్ సర్వాన్ పీఠస్యోత్తరపార్శ్వతః ॥౧౦౯॥
హరి మభ్యర్చయే త్పశ్చాదర్ఘ్యపాద్యాదిభి ర్నరః।

அர்ச்சயித்வா குரூந்ஸர்வாந் பீடஸ்யோத்தரபார்ஶ்வத꞉॥ ௧௦௯.
ஹரிமப்யர்ச்சயேத்பஶ்சா தர்க்யபாத்யாதிபிர்நர꞉।

தா-ம்.—திவ்ய ஸிம்ஹாஸனத்துக்கு இடதுபக்கத்தில் பூர்வாசார்யர்களுக்கு ஆஸநம ஸமர்ப்பித்துத் திருவாராதநமசெய்து, பின்பு அர்க்யம் பாத்யம் முதலியவைகளினால் ஸ்ரீமந்நாராயணனை யாராதிக்கக்கடவன். ௧௦௯.

స్వవామే పూరయే త్కుమ్భం గన్ధపుష్పయుతామ్బునా॥౧౧౦॥
సంపూర్య తస్య తోయేన లఘుపాత్రాణి పఞ్చ చ।
ఏలా చన్దనకర్పూరకోష్ఠాన్ పాత్రేషు విన్యసేత్॥ ౧౧౧॥

10

ஸ்வவாமேபூரயேத்கும்பம் கந்தபுஷ்பயுதாம்புநா|| கக0.

ஸம்பூர்யதஸ்யதோயேந லகுபாத்ராணிபஞ்சச|
ஏலாசந்தநகர்பூர கோஷ்டாந்பாத்ரேஷுவிந்யஸேத்|| ககக.

தா-ம்.—தன்னுடைய இடதுபக்கத்தில் பரிசுத்தமான தீர்த்தம் நிறைத்தகும்பத்லைதவைத்து அதில் சந்தனம் புஷ்பம் முதலான வாஸனைத்ரவ்யங்களைச்சேர்த்து, அந்த தீர்த்தத்தினுல் ஐந்து வட்டில்களை நிறைத்து அவைகளில் ஏலக்காய், சந்தநம்,பச்சைக்கற்பூரம், கோஷ்டமாஞ்சி, இவைகளைச்சேர்க்கவேண்டியது. ககக.

అథవా తులసీపత్రం దత్వా మన్త్రేణ పూజయేత్।
అర్ఘ్యం పాద్యంతథా చామంమన్త్రేణైవ నివేదయేత్॥౧౧౨॥

அதவாதுளஸீபத்ரம் தத்வாமந்த்ரேணபூஜயேத்|
அர்க்யம்பாத்யம்ததாசாமம் மந்த்ரேணைவநிவேதயேத்||

தா-ம்.—அந்தவாஸனைத்ரவ்யங்களில்லாவிடில் துளஸீதளத்தைச்சேர்க்கவும், பின்பு அந்த பாத்ரங்களை த்வயத்தினுல் மந்த்ரித்து, அந்தத்தீர்த்தத்தினுல் அர்க்யம், பாத்யம், ஆசமநம், இவைகளை மந்த்ரத்தைச்சொல்லி பகவானுக்கு ஸமர்ப்பிக்க வேண்டியது. ககஉ.

దద్యాత్ప్రత్యుపచారం తు జలం పుష్పాఞ్జలిం తథా।

தத்யாத்ப்ரத்யுபசாரந்துஜலம் புஷ்பாஞ்ஜலிம்ததா|

தா-ம்.—தந்ததாவநம், ஸ்நாநம்; முதலிய ஒவ்வொரு உபசாரங்களிலும் அர்க்யபாத்ய ஆசமநங்களும், ஒரு விடுபுஷ்பமும் ஸமர்ப்பித்துக் கைகூப்பவேண்டியது. ககஉ-ஒ.

నివేశ్య స్నానపీఠేఽథ తైలాభ్యఞ్జన పూర్వకమ్॥ ౧౧౩॥
స్నాపయే న్మన్త్రరత్నేన సూక్తై ర్విష్ణుప్రకాశకైః।
ఉద్వర్తనం చన్దనాద్యైః కృత్వా స్నాప్య శుభై ర్జలైః॥౧౧౪॥
దీప్తై ర్నీరాజయిత్వాతు దద్యా దాచమనోదకమ్।

நிவேஶ்யஸ்நாநபீடேத தைலாப்யஞ்சநபூர்வகம்|| ககங.

ஸ்நாபயேந்மந்த்ரரத்நேந ஸூக்தைர் விஷ்ணுப்ரகாசகைஃ|
உத்வர்த்தநம்சந்தநாத்யைஃ க்ருத்வாஸ்நாப்யசுபைர்ஜலைஃ|| ககச.

தைலைர்நீராஜயித்வாது தத்யாதாசமநோதகம்|

தா-ம்.—பின்பு திருமஞ்சந வேதிகையில் எழுந்தருளப்பண்ணி தைலக்காப்பு ஸமர்ப்பித்து, சந்தநம் நெல்லிக்காய் முதலானவைகளால் திருமேனியைச் சோதித்து, வாஸனை சேர்த்தஜலத்தினால் ஸ்ரீமந்நாராயணனுடைய ப்ரபாவத்தைச்சொல்லுகிற புருஷஸூக்தம் முதலிய மந்த்ரங்களையும் த்வயத்தையு மநுஸந்தித்துக்கொண்டு திருமஞ்சநம்செய்து கடைசியில் மங்களாரத்தியும் ஆசமநமும் ஸமர்ப்பிக்கக்கடவன். ககச௨.

వస్త్రం శుభతరం దత్వా తథైవాచ మనీయకమ్॥ ౧౧౫॥

దత్వా చైవో పవీతం చ మధుపర్కేణ పూజయేత్ ।

வஸ்த்ரம்சுபதரம்தத்வா ததைவாசமநீயகம்|| ககரு.

தத்வாசைவோபவீதஞ்ச மதுபர்கேணபூஜயேத்|

தா-ம்,—அநந்தரம் திருப்பரியட்டம் ஸமர்ப்பித்து, ஆசமநீயம் ஸமர்ப்பித்து. உபவீதம் ஸமர்ப்பித்து, மதுபர்கம்கண்டருளப்பண்ண வேண்டும். ககரு௨.

భూషణై రప్యలఙ్కృత్య గన్ధం దత్వా సువాసితమ్॥ ౧౧౬॥

సురభీణి చ పుష్పాణి మాల్యాని వివిధాని చ।

ధూపం దీపం చ నైవేద్యం తామ్బూలం చ సమర్పయేత్॥౧౧౭॥

பூஷணைரப்யலங்க்ருத்ய கந்தம்தத்வாஸுவாஸிதம்|| ககசா.

ஸுரபீணிசபுஷ்பாணி மால்யாநிவிவிதாநிச|

தூபம்தீபஞ்ச நைவேத்யம் தாம்பூலஞ்ச ஸமர்பயேத்|| ககஎ.

தா-ம்.—திருவாபரணம், பரிமளம்சேர்த்த சந்தநம், பரிமளமுடைய அநேகவிதமான புஷ்பமாலைகள், தூபம், தீபம், இவைகளை ஸமர்ப்பித்து, ப்ரஸாதம், பாயஸம், திருப்பணியாரம் முதலானவைகளையும், பழம் அடைக்காய்களையும் அமுதுசெய்யப் பண்ணவேண்டியது. ககஅ.

పరిణీయ నమస్కృత్య స్తుత్వా స్తుతిభిరేవ చ।

దీపైర్నీరాజనం కృత్వా సుమనోఽఞ్జలినాఽర్చయేత్॥౧౧౮॥

பரிணீயநமஸ்க்ருத்ய ஸ்துத்வாஸ்துதிபிரேவச|
நீரைபர்நீராஜநம்க்ருத்வா ஸுமநோஞ்ஜலிநார்சயேத்| ௧௧௮.

தா-ம்.—பின்பு ப்ரதக்ஷிணம்செய்து தெண்டன் ஸமர்ப்பித்து, ஜிதந்தாமுதலிய ஸ்தோத்ரங்களை அர்த்தாநுஸந்தாநத்துடன் அநுஸந்தித்து மங்களாரத்தி ஸமர்ப்பித்து, இரண்டுகைகளிலும் புஷ்பங்களை எடுத்துத் திருவடிகளில் ஸமர்ப்பிக்கக்கடவன். ௧௧௮.

సర్వైస్సర్వోపచారైః మన్త్రరత్నేన దేశికః ।
శ్రీమదష్టాక్షరేణాపి సమ్యగారాధనం హరేః ॥ ౧౧౯॥

ஸர்வாங்குர்வீதோபசாராங் மந்த்ரரத்நேநதேசிகஃ|
ஸ்ரீமதஷ்டாக்ஷரேணாபி ஸம்யகாராதநம்ஹரேஃ|| ௧௧௯

தா-ம்.—பகவதாராதநத்தில் திருமந்த்ரத்திலாவது, த்வயத்திலாவது ஸமஸ்தோபசாரங்களையும் ஸமர்ப்பிக்கக்கடவன். ௧௧௯.

ఏవం త్రికాలమర్చాయాం పూజయేద్విధివద్ధరిమ్।
అర్చాయా యద్యభావస్స్యాద్ధృదయే స్థణ్డిలేపి వా ॥ ౧౨౦॥
అర్చయే న్మనసా ధ్యాత్వా హరిం సమ్యక్సమాధిమాన్ ।

ஏவம்த்ரிகாலமர்ச்சாயாம் பூஜயேத்விதிவத்தரிம்|
அர்ச்சாயாயத்யபாவஸ்ஸ்யாத்த்ருதயேஸ்தண்டிலேபிவா||௧௨௦.
அர்ச்சயேந்மநஸாத்யாத்வா ஹரிம்ஸம்யக்ஸமாதிமாந்|

தா-ம்—இவ்விதமாய் உதயம், மத்யாஹ்நம், ஸாயங்காலம் இம்மூன்றுகாலங்களிலும் அர்ச்சாவிக்ரஹத்தில் ஸ்ரீமந்நாராயணனை ஆராதிக்கக்கடவன். அர்ச்சாவிக்ரஹமில்லாவிடில் மநஸ்ஸில் த்யாநம் செய்யக்கடவன். அல்லது, புல்முதலியவையில்லாத ப்ரதேசத்தில் விக்ரஹத்தை யெழுதி அதில்பகவானை த்யாநம் செய்யக்கடவன். ௧௨௦.

అష్టోత్తరసహస్రం వా శతమష్టోత్తరం తు వా ॥ ౧౨౧॥
అష్టావింశతికృత్వో వా మన్త్రరత్నమనుస్మరన్ ।

அஷ்டோத்தரஸஹஸ்ரம்வா சதமஷ்டோத்தரந்துவா|| ௧௨௧.
அஷ்டாவிம்சதிக்ருத்வோவா மந்த்ரரத்நமநுஸ்மரந்|

தா-ம்.—திருவாராதநம் செய்தபின் ஆயிரத்தெட்டுத்தரமாவது நூற்றெட்டுத் தரமாவது, இருபத்தெட்டுத்தரமாவது, த்வயமந்த்ரத்தைஜபம்செய்யக்கடவன். ௧௨௧.

ద్వయాత్పరతరో మన్త్రో నాస్తి సర్వప్రదో నృణామ్॥ ౧౨౨॥
యస్యోచ్చారణమాత్రేణ సర్వసిద్ధిమవాప్నుయాత్॥ ౧౨౩॥
ద్వయార్థరహితం విప్రం దూరతః పరివర్జయేత్ ।

த்வயாத்பரதரோமந்த்ரோ நாஸ்திஸர்வப்ரதோந்ருணாம்|| ௧௨௨.
யஸ்யோச்சாரணமாத்ரேண ஸர்வஸித்திமவாப்நுயாத்|
த்வயார்த்தரஹிதம்விப்ரம் தூரதஃபரிவர்ஜயேத்|| ௧௨௩.

தா-ம்.—அபேக்ஷிதங்களைக்கொடுக்கிற மந்த்ரங்களில் த்வயமே ஶ்ரேஷ்டமான மந்த்ரம். இதை அர்த்தாநுஸந்தாநமின்றிக்கே சொன்னபோதிலும் எல்லாமநோரதங்களையும் பூர்த்திபண்ணிவைக்கும். இதைக்காட்டிலும் உயர்ந்தமந்த்ரம் கிடையாது. ப்ராஹ்மணன் இதை முக்கியமாய் அர்த்தத்துடன் ஜபிக்கக்கடவன். அப்படி ஜபம்செய்யாவிடில் அவனுடன் கூடவுட்கார்தல், பேசுதல், முதலானவை செய்யக் கூடாது. ௧௨௩.

ఇతి శ్రీ పరాశర స్మృతౌ ఉత్తరఖణ్డే విశిష్టపరమధర్మశాస్త్రే
విస్తృతనిత్యారాధనవర్ణనం నామ షష్ఠోఽధ్యాయః,

௬-வது அத்தியாயம் முற்றிற்று.

௭-வது அத்தியாயம்.

டோலோத்ஸவவர்ணநம்.

శ్రీపరాశర ఉవాచ,

నిత్యం సాయాహ్నసమయే డోలాయాం పూజయేద్ధరిమ్॥
చతుస్తమ్భమయీం దివ్యాం చతుర్ద్వామవిభూషితామ్॥ ౧॥
దివ్యస్రగ్వసనోపేతాం శిబికాం పరికల్పయేత్ ।

நித்யம்ஸாயாஹ்நஸமயே டோலாயாம்பூஜயேத்தரிம்|
சதுஸ்தம்பமயீம்திவ்யாம் சதுர்தாமவிபூஷிதாம்|| ௧
திவ்யஸ்ரக்வஸநோபேதாம் சிபிகாம்பரிகல்பயேத்|

தா-ம்.—ப்ரதிதினம் ஸாயங்காலத்தில் ஸ்ரீமந்நாராயணனை ஊஞ்ஜலிலெழுந்தருளப்பண்ணி உத்ஸவம் செய்யவேண்டியது. அதற்

கர்க ஊஞ்சலை நாலுபக்கத்திலும் நாலுகால்கள் நிறுத்தி பக்கங்களில் நான்கு சங்கிலிகள் கட்டித் தொங்கவிட்டு ஸுவர்ணம், வெள்ளி, ரத்நம், முத்து, புஷ்பம், இவைகளினால் செய்யப்பட்ட மாலைகளினாலலங்கரித்து, உயர்ந்த வஸ்த்ரங்கள் விரித்து அழகியதாக ஏற்படுத்தவேண்டும். ௧௨.

స్తమ్భేషు చతురో వేదాన్ సమావాహ్య ప్రపూజయేత్ ॥౨॥
ఇతిహాసపురాణాని వేదాఙ్గాని తథా ద్విజాః ।
దామాన్యావాహయేత్తస్యాం శిబికాయాం ద్విజోత్తమాః ॥౩॥
తదధస్తాద్వైనతేయం నాగరాజ మథోపరి ।
పాదేషు చతురో మన్త్రాన్ సావిత్రీం తు ధ్వజే తథా ॥ ౪॥
ప్రణవం చ పతాకాయాం ఛత్రేషు వ్యాహృతీస్తథా ।
తోరణేషు సురాన్ సర్వాన్ వ్యజనేషు తథైవ చ ॥ ౫॥
ఇత్యేవం వాఙ్మయీం విద్యాం డోలాయాం పూజయేచ్ఛుభామ్ ।
లక్ష్మ్యా సహ శయానం వై తస్యాం దేవం ప్రపూజయేత్ ॥౬॥

ஸ்தம்பேஷுசதுரோவேதாந் ஸமாவாஹ்யப்ரபூஜயேத்॥ ௨.

இதிஹாஸபுராணாநிவேதாங்காநிததாத்விஜா:।
தாமாந்யாவாஹயேத்தஸ்யாம் சிபிகாயாம்த்விஜோத்தமா:॥ ௩.

ததஸ்தாத்வைநதேயம் நாகராஜமதோபரி।
பாதேஷுசதுரோமந்த்ராந் ஸாவித்ரீந்துத்வஜேததா॥ ௪.

ப்ரணவஞ்சபதாகாயாம் சத்ரேஷுவ்யாஹ்ருதீஸ்ததா।
தோரணேஷுஸுராந்ஸர்வாந் வ்யஜநேஷுததைவச॥ ௫.

இத்யேவம்வாங்மயீம்வித்யாம் டோலாயாம்பூஜயேச்சுபாம்।
லக்ஷ்ம்யாஸஹசயாநம்வை தஸ்யாம்தேவம்ப்ரபூஜயேத்॥ ௬.

தா-ம்.—அந்த ஊஞ்சலில் நான்குபக்கங்களில் நான்குவேதங்களையும், ஸ்ரீராமாயணம்முதலிய இதிஹாஸங்கள், ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலிய புராணங்கள், மீமாம்ஸைமுதலிய சாஸ்த்ரங்கள், வ்யாகரணம்முதலிய வேதாங்கங்கள், இவைகளை நான்கு சங்கிலிகளிலும், ஆவாஹநம்செய்து ஊஞ்சலுக்குக்கீழ் கருத்மானையும், நாலு கம்பங்

களுக்கும் நடுவில் ஆதிசேஷனையும், நாலு கால்களில் நாலு வ்யாஹ்ருதி மந்த்ரங்களையும், த்வஜத்தில் ஸாவித்ரியையும், மேல்சுற்றும் கட்டியிருக்கிற டக்கயங்களில் ப்ரணவத்தையும், குடைகளில் வ்யாஹ்ருதிகளையும், தோரணங்களிலும் விசிறிகளிலும் ஸமஸ்ததேவதைகளையும், ஆவாஹநம்செய்து, இப்படி வித்யாஸ்வரூபமாய், மங்களகரமான தேவதையை ஊஞ்சலிலாராதித்து, அந்த ஊஞ்சலில் ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடன் சயநித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீமந்நாராயணனை ஆராதநம் செய்யக்கடவன், சு.

గన్ధైః పుష్పైశ్చ వివిధైః ఫలైర్భక్ష్యై స్సపాయసైః ।
ధూపైర్దీపైశ్చ తామ్బూలై ర్యథాశక్తి చ పూజయేత్ ॥ ౭॥

கந்தை:புஷ்பைஸ்சவிவிதைர் பலைர்பக்ஷ்யைஸ்ஸபாயஸை:|
தூபைர்தீபைஸ்சதாம்பூலைர்யதாசக்திசபூஜயேத்॥ எ.

தா-ம்.—ஊஞ்சலில் எழுந்தருளப்பண்ணினபின்பு சந்தநம், புஷ்பம், தூபம், தீபம், பாயஸம், திருப்பணியாரம், பழம், தாம்பூலம், இவைகளினுலாராதநம் செய்யவேண்டும். எ.

చామరై స్తాలవృన్తాద్యై ర్గీతవాదిత్రనర్తనైః ।
పూజాం కృత్వా యథాశక్తి పశ్చాద్డోలాం ప్రడోలయేత్ ॥ ౮॥

சாமரைஸ்தாலவ்ருந்தாத்யைர் கீதவாதித்ரநர்தநை:|
பூஜாம்க்ருத்வாயதாசக்தி பஸ்சாட்டோலாம்ப்ரடோலயேத்॥ அ.

தா-ம்.—சாமரம் திருவாலவட்டங்களை வீசுதல், காநம் செய்தல், வீணைமுதலியவைகளைக் கேட்பித்தல், நர்த்தநம் செய்தல், இவைகளினுல் தன்சக்திக்குத் தகுந்தபடி ஆராதநம் செய்து அநந்தரம் ஊஞ்சலைச்சலிப்பிக்கவேண்டியது, அ.

వేదై శ్చతుర్భిః ప్రథమం వేదాఙ్గై స్తదనన్తరమ్ ।
సూక్తై శ్చ బ్రాహ్మణస్తోత్రైః పురాణై ర్వైష్ణవై శ్శుభైః ॥ ౯॥

గాపయిత్వా ప్రబన్ధైశ్చ శనై ర్డోలాం చ డోలయేత్ ।
శ్రియం స్వలఙ్కృతాం తత్రారోప్య డోలాం విశేషతః ॥ ౧౦॥

வேதைஸ்சதுர்பி:ப்ரதமம் வேதாங்கைஸ்ததநந்தரம்|
ஸூக்தைஸ்சப்ராஹ்மணஸ்தோத்ரை: புராணைர்வைஷ்ணவைஸ்சுபை:

காபயித்வாப்ரபந்தைஶ்சசனைர் டோலாஞ்சடோலயேத்|
ஸ்ரியம்ஸ்வலங்க்ருதாம் தத்ராரோப்ய டோலாம்விசேஷத:|| ௧௦.

தா-ம்.—ஊஞ்சலாடும்போது முதலில் நான்கு வேதங்களையும், அநந்தரம் வேதாங்கங்களையும், உபநிஷத்துக்களையும், ஸாத்விகபுராணங்களையும், திவ்யப்ரபந்தங்களையும் கானஞ்செய்வித்து மெள்ளமெள்ள ஊஞ்சலைச் சலிப்பிக்கவேண்டும். ஊஞ்சலில் ஸ்ரீமஹாலக்ஷ்மியை அவஶ்யமாய் எழுந்தருளப்பண்ணவேணும். ௧௦.

డోలామహోత్సవో నిత్యం ప్రతిమాస మథాపివా ।
మాసం సంవత్సరం వా స్యాన్నిమిత్తేషు విశేషతః ॥ ౧౧॥

டோலாமஹோத்ஸவோநித்யம் ப்ரதிமாஸமதாபிவா|
மாஸம்ஸம்வத்ஸரம் வாஸ்யாந்நிமித்தேஷு–விசேஷத:|| ௧௧.

தா-ம்.—டோலோத்ஸவம் தினந்தோறும் செய்யவேண்டியது. அதற்குச் சக்தியில்லாவிடில் மாஸத்துக்கொருதரமாவது வருஷத்திலொருதரமாவது செய்யவேண்டும். விசேஷதினங்களில் யதாசக்தி டோலோத்ஸவம் அவஶ்யம் செய்யவேண்டும். ௧௧.

అత్యన్తాభిమతా డోలా విష్ణుదేవస్య శార్ఙ్గిణః ।
ఆషాఢాదిచతుర్మాసాం డోలాస్యాత్ప్రతివత్సరమ్ ॥ ౧౨॥

அத்யந்தாபிமதாடோலா விஷ்ணுதேவஸ்யசார்ங்கிண:|
ஆஷாடாதிசதுர்மாஸாந் டோலாஸ்யாத்ப்ரதிவத்ஸரம்|| ௧௨.

தா-ம்.—ஸ்ரீமந்நாராயணனுக்கு டோலோத்ஸவம் மிகவுமிஷ்டமாயிருக்கும். ஆகையால் ஆஷாடம், ஶ்ராவணம், பாத்ரபதம், ஆஶ்வயுஜம், இந்த நாலு மாஸங்களிலும் ப்ரதிவருஷம் டோலோத்ஸவம் செய்யவேண்டும். ௧௨.

నివేశ్య శుభశయ్యాయాం డోలాయాం విధివద్బుధః ।
ఋగ్గానైస్సామగానైశ్చ యజుఃపాఠైః ప్రబన్ధకైః ॥ ౧౩॥
పుణ్యైర్మనోహరైః స్తోత్రైర్డోలాపూజాం సమాచరేత్ ।

நிவேஶ்யசுபசய்யாயாம் டோலாயாம்விதிவத்புத:|
ருக்கானைஸ்ஸாமகானைஶ்ச யஜு:பாடை:ப்ரபந்தகை:|| ௧௩.
புண்யைர்மனோஹரைஸ்ஸ்தோத்ரைர் டோலாபூஜாம்ஸமாசரேத்|

தா-ம்.—டோலோத்ஸவத்தின் மஹிமையையறிந்த புருஷன் ம்ருதுவான திருப்பள்ளியையுடைய ஊஞ்சலில் ஸ்ரீமந்நாராயணனை எழுந்தருளப்பண்ணி க்ரமமாக ருக்யஜுஸ் ஸாமவேதங்களினுலும், திவ்ய-ப்ரபந்தங்களினுலும், மனதுக்கின்பமாய் பகவதநுக்ரஹத்துக்கு ஸாதகமாயிருக்கிற ஸ்தோத்ரங்களினுலும் ஸ்தோத்ரம் செய்யக் கடவன். கஙஉ.

దర్శనా దేవ డోలాయాం త్రయీనాథస్య శార్ఙ్గిణః ॥ ౧౪॥
సర్వబన్ధవినిర్ముక్తా నరా యాన్తి పరం పదమ్ ।

தர்சநாதேவடோலாயாம் த்ரயீநாதஸ்யசார்ங்கிண: கச.
ஸர்வபந்தவிநிர்முக்தா நராயாந்திபரம்பதம்|

தா-ம்.—ஸகல வேதத்தின் ஸாரார்த்தமான ஸ்ரீமந்நாராயணனுடைய டோலோத்ஸவத்தை ஸேவித்தவர்கள் ஸம்ஸாரத்தைக் கடந்து மோக்ஷத்தையடைவார்கள். கசஉ.

డోలాయాం దర్శనం విష్ణోర్మహాపాతకనాశనమ్ ॥ ౧౫॥
హయమేధాయుతాత్పుణ్యం సర్వకామఫలప్రదమ్ ।

டோலாயாம்தர்சநம் விஷ்ணோர் மஹாபாதகநாசநம்|| கரு.
ஹயமேதாயுதாத்புண்யம் ஸர்வகாமபலப்ரதம்|

தா-ம்.—ஸ்ரீமந்நாராயணனுடைய டோலோத்ஸவத்தை ஸேவித்தவனுக்கு ப்ரஹ்மஹத்யைமுதலிய பெரிய பாபங்களும் நசிக்கும். பதினுயிரமஶ்வமேதத்தினுலுண்டான புண்யத்தைக்காட்டிலும் அதிகபுண்யமுண்டாகும். இச்சித்தவையெல்லாம் ஸித்திக்கும். கருஉ.

డోలామహోత్సవం కుర్యాత్ సకృద్వా యో ద్విజోత్తమాః॥ ౧౬.
కులకోటిం సముద్ధృత్య స గచ్ఛేద్వైష్ణవం పదమ్ ।

டோலாமஹோத்ஸவம்குர்யாத்ஸக்ருத்வாயோத்விஜோத்தமா:|| கசு.
குலகோடிம்ஸமுத்ருத்ய ஸகச்சேத்வைஷ்ணவம்பதம்|

தா-ம்.—மஹர்ஷிகளே! எவனெருவன் ஸ்ரீமந்நாராயணனுக்கு ஒருக்காலாகிலும் டோலோத்ஸவத்தைச் செய்கிருனே? அவன்தன் குலத்திற்பிறந்தார்களாய் மோக்ஷத்தையடையாமல் கீழ்லோகங்களிலிருக்கிற எல்லாரையும் மோக்ஷத்தையடைவிப்பித்துத் தானும்மோக்ஷத்தையடைகிருன். கசுஉ.

జన్మర్క్షే వాసుదేవస్య రాఘవస్య విశేషతః ॥ ౧౭॥
మహోత్సవం ప్రకుర్వీత డోలాయాం వినివేశ్య తౌ ।

ஜந்மர்க்ஷேவாஸுதேவஸ்ய ராகவஸ்யவிசேஷத:|| கஎ.
மஹோத்ஸவம்ப்ரகுர்வீத டோலாயாம் விநிவேஶ்யதௌ|

தா-ம்.—ஸ்ரீஜயந்தி, ஸ்ரீராமநவமி, இந்த உத்ஸவங்களில் கண்ணன், சக்ரவர்த்தித்திருமகன், இவர்களுக்கு டோலோத்ஸவம் செய்யவேண்டும். கஎஉ.

ఉత్సవే యో హరేః క్షేత్రే డోలాం పశ్యతి భక్తిమాన్ ॥ ౧౮॥
స మహాపాతకైర్ఘోరై ర్ముచ్యతే నాత్ర సంశయః ।

உத்ஸவேயோஹரே:க்ஷேத்ரே டோலாம்பஶ்யதிபக்திமாந்|| கஅ.
ஸமஹாபாதகைர்கோரைர் முச்யதேநாத்ரஸம்சய:|

தா-ம்.—ஒருவன் பக்தியுடையவனாய் ஸ்ரீரங்கம்முதலிய திவ்யதேசங்களிற் சென்று டோலோத்ஸவத்தை ஸேவித்தானாகில் அவனுடைய ஸமஸ்த பாபங்களும் நசிக்கும். இதில் ஸம்சயமில்லை. கஅஉ.

సర్వాన్ కామానవాప్నోతి పదం ప్రాప్నోత్యసంశయమ్ ॥ ౧౯॥

ஸர்வாந்காமாநவாப்நோதி பதம்ப்ராப்நோத்யஸம்சயம்|| க௯.

தா-ம்.—டோலோத்ஸவத்தை ஸேவித்தவன் ஸகல மநோரதங்களையுமடைந்து கடைசியில் மோக்ஷத்தையடைவன். இதில் ஸம்சயமில்லை. க௯உ.

యత్ర యత్ర స్థితా డోలా దేవస్య పరమాత్మనః ।
తత్ర దేవగణా స్సర్వే బ్రహ్మరుద్రపురోగమాః ॥ ౨౦॥
గాయన్తి సామగానేన విమానస్థాశ్చ భక్తితః ।

யத்ரயத்ரஸ்திதாடோலா தேவஸ்யபரமாத்மந:|
தத்ரதேவகணாஸ்ஸர்வேப்ரஹ்மருத்ரபுரோகமா:|| ௨௦
காயந்திஸாமகாநேந விமாநஸ்தாஶ்சபக்தித:|

தா-ம்.—ஸ்ரீமந்நாராயணனுக்கு எந்தெந்த விடங்களில் டோலோத்ஸவம் நடக்கிறதோ? அங்கெல்லாம் ப்ரஹ்மா,ருத்ரன் முதலிய தேவர்கள் விமாநங்களிலேறிவந்து பக்தியுடன் ஸாமகாநம் பண்ணி ஸ்துதிசெய்கிறார்கள்.

యస్తు పశ్యేచ్ఛుభాం డోలాం హరే ర్నారాయణస్య హి ॥ ౨౧ ॥
స స్నాత స్సర్వతీర్థేషు సర్వయజ్ఞేషు దీక్షితః ।

யஸ்துபச்யேச்சுபாம் டோலாம் ஹரேர்நாராயணஸ்யஹி|| உக.
ஸஸ்நாதஸ்ஸர்வதீர்த்தேஷு ஸர்வயஜ்ஞேஷு தீக்ஷிதஃ|

தா-ம்.—எவனொருவன் ஸ்ரீமந்நாராயணனுடைய டோலோத்ஸவத்தை ஸேவிக்கிறானோ? அவன் ஸமஸ்தபுண்யதீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்தவனாகிறான், ஸமஸ்தயஜ்ஞங்களையும் செய்தவனாகிறான் (அந்தபலங்களை யெல்லா மடைவன்).

గవా మయుతదానస్య ఫల మాప్నోతి చ ధ్రువమ్ ।
సర్వపాపవిముక్తోఽన్తే విష్ణుసాయుజ్య మాప్నుయాత్ ॥ ౨౨ ॥

கவாமயுததாநஸ்ய பல மாப்நோதிசத்ருவம்|| உஉ.
ஸர்வபாபவிமுக்தோந்தேவிஷ்ணுஸாயுஜ்யமாப்நுயாத்|| உஉ.

தா-ம்.—ஸ்ரீமந்நாராயணனுடைய டோலோத்ஸவத்தை ஸேவித்தவன் பதினாயிரம் கோதாநத்தின் பலத்தையடைவன். அவனுக்கு எல்லாப்பாபங்களும் தொலையும். இந்த சரீராவஸாநகாலத்தில் மோக்ஷத்தை யடைவன். இதில் ஸம்சயமில்லை; நிஸ்சயம்.

ఇతి శ్రీపరాశరస్మృతా వుత్తరఖణ్డే విశిష్ట పరమధర్మశాస్త్రే
డోలోత్సవవర్ణనం నామ సప్తమోఽధ్యాయః.

எ-வது அத்யாயம் முற்றிற்று.

அ-வது அத்யாயம்.

நைமித்திகோத்ஸவவர்ணநம்,

శ్రీపరాశర ఉవాచ.

అథ నైమిత్తికం వక్ష్యే విష్ణో రారాధనక్రమమ్ ।
యదుక్త మృషిభిః పూర్వం తద్బ్రవీమి విధానతః ॥ ౧ ॥

ஸ்ரீபராசரஉவாச.

அதநைமித்திகம்வக்ஷ்யே விஷ்ணோராராதநக்ரமம்|
யதுக்தம்ருஷிபிஃபூர்வம் தத்ப்ரவீமிவிதாநதஃ|| க.

தா-ம்.—பராசரபகவான் சொல்லுகிறார்.—ருஷிகளே! பகவானுக்கு நித்யமாகச்செய்யவேண்டும் திருவாராதநக்ரமத்தைப் பரக்கச்சொன்னேன். இனி, விசேஷதிநங்களிற் செய்யவேண்டிய திருவாராதநக்ரமத்தைச்சொல்லப்போகிறேன் கேளுங்கள். இவ்வண்ணமே வஸிஷ்டர் முதலிய ருஷிகளும் முற்காலத்தி லுபதேசித்திருக்கிறார்கள்.

ఉపోష్యై కాదశీం సమ్య గ్ద్వాదశ్యా మరుణోదయే।
ధాత్రీస్నానం నరః కృత్వా పూజయే న్మధుసూదనమ్॥ ౧॥

உபோஷ்யைகாதசீம்ஸம்யக் த்வாதஶ்யாமருணோதயே|
தாத்ரீஸ்நாநம்நர:க்ருத்வாபூஜயேந்மதுஸூதநம்|| ௨.

தா-ம்.—ஏகாதசியன்றைக்கு ஒன்றும் புஜியாமலுபவாஸம்செய்து த்வாதசி யன்றைக்கு விடியற்காலத்தில் தலைக்கு நெல்லிக்காய் தேய்த்துக்கொண்டு ஸ்நாநம் செய்து பின்பு ஸ்ரீமந்நாராயணனுக்குத்திருவாராதநம் செய்யவேண்டும். ௨.

కోమలై స్తులసీపత్రై ర్హృద్యమఞ్జరిసంయుతైః।
అర్చయే న్మన్త్రరత్నేన త్వష్టోత్తరశతం హరిమ్॥ ౩॥

கோமலைஸ்துலஸீபத்ரைர் ஹ்ருத்யமஞ்ஜரிஸம்யுதை:|
அர்ச்சயேந்மந்த்ரரத்நேநத்வஷ்டோத்தரசதம்ஹரிம்||

தா-ம்.—அத்திருவாராதநத்தில், அழகியதாயிருக்கிற கதிர்களையுடைய ம்ருதுவான திருத்துழாயினிதழ்களைக்கொண்டு த்வயமந்த்ரத்தினல் ஸ்ரீமந்நாராயணனுக்கு அர்ச்சனை செய்யவேண்டியது. ௩.

మధ్వాజ్యగుడసంయుక్తం పాయసాన్నం సమర్పయేత్।
తేనైవ జుహుయా దగ్నౌ మన్త్రేణైవ తు భక్తిమాన్॥ ౪॥

மத்வாஜ்யகுடஸம்யுக்தம் பாயஸாந்நம்ஸமர்ப்பயேத்|
தேநைவஜுஹுயாதக்நௌ மந்த்ரேணைவதுபக்திமாந்|| ௪.

தா-ம்.—பின்பு, தேன், பால், வெல்லம் சேர்த்துச் செய்தப்ரஸாதத்தை யமுதுசெய்யப்பண்ணி, அந்த ப்ரஸாதத்தினலேயேத்வயமந்த்ரத்தைச் சொல்லி வெகுபக்தியுடன் தன் சக்திக்குத்தக்கபடி அக்நியில் ஹோமம் செய்யவேண்டியது. ௪.

వైష్ణవా న్భోజయే త్పూర్వం స్వయం భుఞ్జీత వై తతః।
పురాణశ్రవణం కృత్వా యాపయే స్తమయం రవేః॥ ౫॥

రాత్రౌ మహోత్సవం కుర్యాద్గీతవాదిత్రనిస్స్వనైః
సద్యః ప్రసన్నో భగవాన్ ప్రీణాతి పురుషోత్తమః॥ ౬॥
తథా నతుష్యతి శ్రీశో యజ్ఞదానవ్రతాదిభిః।
ద్వాదశీపూజనాదన్యద్విష్ణోః ప్రీతికరం న తు॥ ౭॥

வைஷ்ணவாந்போஜயேத் பூர்வம் ஸ்வயம்புஞ்ஜீதவைததஃ|
புராணஶ்ரவணம்க்ருத்வா யாவதஸ்தமயம்ரவேஃ|| ௫.
ராத்ரௌமஹோத்ஸவம் குர்யாத் கீதவாதித்ரநிஸ்வநைஃ|
ஸத்யஃப்ரஸந்நோபகவாந் ப்ரீணாதிபுருஷோத்தமஃ|| ௬.
ததாநதுஷ்யதிஸ்ரீசோ யஜ்ஞதாநவ்ரதாதிபிஃ|
த்வாதசீபூஜநாதந்யத் விஷ்ணோஃ ப்ரீதிகரம்நது|| ௭.

தா-ம்.—பின்பு ஸ்ரீவைஷ்ணவர்களை யமுதுசெய்யப்பண்ணி வைத்து அதன்பின் அச்சேஷத்தைத் தான்புஜிக்கக்கடவன், அநந்தரம், ஸூர்யனஸ்தமிக்குமளவு முறங்காமலிருந்து புராணம் வாசிக்குமிடத்திற்குச் சென்று புராணகதைகளைக்கேட்டிருந்து, அன்றிராத்திரி வீணை மத்தளம் முதலிய மங்கள வாத்யங்களை முழக்கி ஸ்ரீமந்நாராயணனுக்குப் பெரிய உத்ஸவம் செய்யக்கடவன். இப்படிசெய்தால் ஸ்ரீமந்நாராயணன் வெகு சீக்ரத்தில் அவனிடத்திலருள்புரிவன். யஜ்ஞம், தாநம், வ்ரதம் முதலிய எதைச்செய்தாலும் அதெல்லாம் த்வாதசியில் கீழ்ச்சொன்னபடி செய்ததிருவாராதநத்தைப்போல் ஸ்ரீபதிக்குப் ப்ரியமாகமாட்டா. ௭.

తులసీపూజనాచ్చైవ తథా భాగవతార్చనాత్।
మన్దవారేఽథ సాయాహ్నే నరకేసరిపూజనాత్॥ ౮॥
అశ్వమేధసహస్రస్య ఫలం ప్రాప్నోతి నిశ్చితమ్।

துலஸீபூஜநாச்சைவ ததாபாகவதார்ச்சநாத்|
மந்தவாரேதஸாயாஹ்நே நரகேஸரிபூஜநாத்|| அ.
அஶ்வமேதஸஹஸ்ரஸ்ய பலம்ப்ராப்நோதிநிஶ்சிதம்|

தா-ம்.—திருத்துழாயையும ஸ்ரீவைஷ்ணவர்களையு மாராதித்தாலும், நரஸிம்ஹ சதுர்த்தசியில் அதிலும் சனிக்கிழமையோடு கூடிய நரஸிம்ஹசதுர்த்தசியில்ஸாயங்காலத்தில் ஸ்ரீநரஸிம்ஹனுக்குத்திருவாராதநம் செய்தாலும் ஆயிரமஶ்வமேதங்களின் பலத்தையடையக்கடவன். இதில் கொஞ்சமும் ஸம்சயமில்லை நிஶ்சயம். அ௨.

కోదణ్డస్థే రవౌ నిత్యం ప్రత్యూషే స్నానమాచరేత్॥ ౯॥

తత్రార్చయేజ్జగన్నాథం ధూపదీపనివేదనైః।
అర్చయిత్వాఽచ్యుతం భక్త్యా న భూయో జన్మభాగ్భవేత్॥ ౧౦॥

கோதண்டஸ்தே ரவௌநித்யம் ப்ரத்யூஷேஸ்நாநமாசரேத்|| கூ,
தத்ரார்ச்சயேஜ்ஜகந்நாதம் தூபதீபநிவேதநை:|
அர்ச்சயித்வாச்யுதம்பக்த்யா நபூயோஜந்மபாக்பவேத்|| க0.

தா-ம்.—மார்கழிமாஸத்தில் விடியற்காலத்தி லெழுந்திருந்து ஸ்நாநம்செய்து ஸ்ரீமந்நாராயணனுக்கு பக்தியுடன் தூபதீபங்கள் ஸமர்ப்பித்து நைவேத்யம் கண்டருளப்பண்ணி, தினந்தோறும் திருவாராதநம் செய்யக்கடவன். இப்படிசெய்கிறவன் திரும்பி ஸம்ஸாரத்திற் பிறக்கமாட்டான். கய.

నద్యాం స్నాత్వా విధానేన తపోమాస్యరుణోదయే।
పూజయేన్మాధవీపుష్పై రపూపాది నివేదయేత్॥ ౧౧॥

అర్చయిత్వా విధానేన సర్వాన్ కామాన్ సమశ్నుతే।
తపస్యే చోదితే భానౌ స్నాత్వా నద్యాం విధానతః॥ ౧౨॥

మాధవీకుసుమై ర్నిత్య మర్చయేన్మాధవం బుధః।
కృసరం గుడముద్గాన్నం శర్కరాఢ్యం నివేదయేత్॥ ౧౩॥

తిలైశ్చ మధుసంయుక్తై ర్జుహుయాత్పౌరుషేణ హి।
పరితుష్యే జ్జగన్నాథ శ్శ్రియా సహ జనార్దనః॥ ౧౪॥

நத்யாம்ஸ்நாத்வாவிதாநேந தபோமாஸ்யருணோதயே|
பூஜயேந்மாதவீபுஷ்பை ரபூபாதிநிவேதயேத்|| கக.

அர்ச்சயித்வாவிதாநேந ஸர்வாந்காமாந்ஸமஶ்நுதே|
தபஸ்யேசோதிதேபாநௌ ஸ்நாத்வாநத்யாம்விதாநத:|| க௨.

மாதவீகுஸுமைர்நித்ய மர்ச்சயேந்மாதவம்புத:|
க்ருஸரம்குடமுத்காந்நம் சர்க்கராட்யம் நிவேதயேத்|| க௩.

திலைஶ்சமதுஸம்யுக்தைர் ஜுஹுயாத்பௌருஷேணஹி|
பரிதுஷ்யேஜ்ஜகந்நாதஶ்ஶ்ரியாஸஹஜநார்தந:||

தா-ம்,—மாகமாஸத்தில் விடியற்காலத்திலும் பால்குநமாஸத்தில்விடிந்தபின்பும் ஆறுகளிற் சென்று ஸ்நாநம் செய்து குறுக்கத்தி புஷ்பத்தைத் திருமாலைகட்டி ஸ்ரீமந்நாராயணனுக்கு தினந்தோறும் ஸமர்ப்பித்துத் திருவாராதநம் செய்யக்கடவன். பின்பு அப்பம் முதலிய திருப்பணியாரங்களும், எள்ளுண்டை, பொங்கல், சர்க்கரைப்பொங்கல் முதலிய ப்ரஸாதங்களும் அமுது செய்யப்பண்ணி, அநந்தரம் எள்ளும் தேனும் கலந்து புருஷஸூக்தத்தின் ருக்குக்களைச் சொல்லி ஹோமம் செய்யக்கடவன். இப்படிசெய்தால் அவனுக்கு ஸமஸ்தமான மநோரதங்களும் நிறைவேறும். அவன்மேல் ஸ்ரீமஹாலக்ஷ்மியும் ஸ்ரீமந்நாராயணனும் அநுக்ரஹம் செய்வார்கள். கச.

మాసి చైత్రే శుక్లపక్షే నవమ్యాఞ్చ పునర్వసౌ ।
తస్యాం జాతో జగన్నాథః కాకుత్స్థో రావణం ద్విషః ॥౧౫॥
తస్యాముపోష్య విధివత్స్నాత్వా సంపూజయేద్ధరిమ్ ।
రామం కమలపత్రాక్షం కౌసల్యానన్దవర్ధనమ్ ॥
నైవేద్యైర్భక్ష్యభోజ్యైశ్చ పూజాజాగరణాదిభిః ౧౬॥
జపైర్హోమైశ్చ దానైశ్చ తత్ర కుర్వీత మఙ్గళమ్ ॥ ౧౭॥

மாஸிசைத்ரேசுக்லபக்ஷே நவம்யாஞ்சபுநர்வஸௌ|
தஸ்யாம்ஜாதோஜகந்நாதஃ காகுத்ஸ்தோராவணம்த்விஷந்||கரு.
தஸ்யாமுபோஷ்யவிதிவத் ஸ்நாத்வாஸம்பூஜயேத்தரிம்|
ராமம்கமலபத்ராக்ஷம் கௌஸல்யாநந்தவர்த்தநம்|| கசு.
நைவேத்யைர்பக்ஷ்யபோஜ்யைஸ்ச பூஜாஜாகரணாதிபிஃ|
ஜபைர்ஹோமைஸ்சதாநைஸ்ச தத்ரகுர்வீதமங்களம்|| கஎ.

தா-ம்.— சைத்ரமாஸம் சுக்லபக்ஷம் நவமிகூடிய புநர்வஸூ நக்ஷத்ரத்தில் கௌஸலையின் கர்ப்பத்தில் ஸர்வேஸ்வரன் ஸ்ரீராமனாய் வந்தவதரித்தார். பின்பநேகமான் இராவணன் முதலிய இராக்ஷஸர்களைக்கொன்றார். அன்றையதினத்தில் அந்த ஸ்ரீராமனுக்கு தூபதீபங்கள் முதலிய உபசாரங்களும், ப்ரஸாதம் திருப்பணியாரம் முதலிய நைவேத்யங்களும் ஸமர்ப்பித்துத் திருவாராதநம் ஸமர்ப்பித்துத் தானுபவாஸமாயிருந்து ஸ்ரீராம மந்த்ரத்தை ஜபம்செய்து பின்பந்த மந்த்ரத்தைச்சொல்லி ஹோமம் பண்ணி தாநங்களைச்செய்து உறங்காமல் விழித்திருந்து ஸ்ரீராமனுக்கு உத்ஸவம் செய்யக்கடவன். கஎ.

త్రివాసరం ప్రకుర్వీత జపహోమార్చనాదికమ్ ।
పూర్ణే మహోత్సవే రమ్యే కుర్వీతా వభృథం శుభమ్॥ ౧౮॥
వైష్ణవాన్ భోజయే చ్ఛక్త్యా దక్షిణాదిభి రర్చయేత్।

த்ரிவாஸரம்ப்ரகுர்வீத ஜபஹோமார்ச்சநாதிகம்|
பூர்ணேமஹோத்ஸவேரம்யே குர்வீதாவப்ருதம்சுபம்|| கஅ
வைஷ்ணவாந்போஜயேச்சக்த்யா தக்ஷிணாதிபிரர்ச்சயேத்|

தா-ம்.—கீழ்ச்சொன்ன ஜபஹோமங்களையும் உத்ஸவத்தையும் மூன்று நாள் நடத்திப்பின்பு அவப்ருதம் என்கிற மங்களஸ்நாநம்செய்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் ததீயாராதநம்செய்து தன்சக்திக்குத் தகுந்தபடி தக்ஷிணைகொடுத்துத்ருப்தியடைவிக்கவேண்டியது. கஅ௯.

నభోమాసే నభస్యే చ కృష్ణాష్టమ్యాం తథైవ చ॥ ౧౯॥
బ్రహ్మర్క్ష సంయుతా పుణ్యా సాజయన్తీతి కీర్తితా ।
ఉపోష్య తస్యాం దేవేశః పూజ్యో జాగరణాదిభిః॥ ౨౦॥
గుడార్ద్రకంచకృసర మపూపాది నివేదయేత్ ।
ప్రాతఃకుర్యా దవభృథం హోమం కుర్వీత వైష్ణవమ్ ॥ ౨౧॥
వైష్ణవాన్ భోజయే చ్ఛక్త్యా దక్షిణాభిః ప్రతోషయేత్ ।
విష్ణుంచాలఙ్కృతం భక్త్యా డోలాయాం వినివేశయేత్

நபோமாஸேநபஸ்யேச க்ருஷ்ணாஷ்டம்யாம்ததைவச||
ப்ரஹ்மர்க்ஷஸம்யுதாபுண்யா ஸாஜயந்தீதிகீர்த்திதா|
உபோஷ்யதஸ்யாம்தேவேசः பூஜ்யோஜாகரணாதிபி:|| உ0.
குடார்த்ரகம்சக்ருஸர மபூபாதிநிவேதயேத்|
ப்ராதஃகுர்யாதவப்ருதம் ஹோமம்குர்வீதவைஷ்ணவம்|| உக.
